திருவள்ளுவர் ஆண்டு 2038

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 101 பகுதி : 11 நவம்-07

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,	செயலாளர்
திரு. இரா குருசாமி பி.ஏ.,	உறுப்பினர்
திரு. டாக்டர். ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S.,	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. இரா. கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி பி.இ.,	உறுப்பினர்
திரு. எஸ்.எம். நாகராசன் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. பி. வீரணன்	உறுப்பினர்
	உறுப்பினர்

கல்லூரிக் குழு

திரு. டாக்டர்.ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S.,	தலைவர்
திரு. இரா.குருசாமி பி.ஏ.,	செயலாளர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,	உறுப்பினர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ.,	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்.,	உறுப்பினர்
இராஜா. திரு. டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி	உறுப்பினர்
திரு. இரா. கண்ணன்	உறுப்பினர்
டாக்டர். திரு. க. சின்னப்பா பிஎச்.டி., முதல்வர்	உறுப்பினர்
டாக்டர். திருமதி. வீ. காந்திமதி பிஎச்.டி., இணைப்பேராசிரியை	உறுப்பினர்
டாக்டர். திருமதி. செ. தனலெட்சுமி பிஎச்.டி., இணைப்பேராசிரியை, பல்கலைக்கழக உறுப்பினர்	உறுப்பினர்
முனைவர் ஆ. முத்துமா க்கம் எம்.ஏ.,பி.எச்.டி., கல்வியியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்	உறுப்பினர்

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 101
பகுதி : 11
நவம்பர் 2007

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு **2038**

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

பொருளடக்கம்

இதழ்மணம் 414

இசை மருத்துவம் 415

மரு. சே. பிரேமா *எம்.டி.(சி), பி.எச்.டி.,*

பாற்கர சேதுபதி நான்மணிமாலை 421

ஆசிரியர் : சிவசம்புப்புலவர்

விளக்கஉரை ஆசிரியர் : பேராசிரியர் இரா. சதாசிவம்

குறுந்தொகை காட்டும் வாழ்வியல் கூறுகள் 438

மு. லோகநாயகி,
முனைவர்ப் பட்ட ஆய்வாளர்

நான்கு தமிழ்ச் சங்கங்கள் 443

கவிஞர் திடியன் பெ. சிவராமன் எம்.ஏ
திராவிட இயல் மாணவன்

இதழ்மணம்

"இசை மருத்துவம்" என்னும் தலைப்பில் பேராசிரியர், மருத்துவர் சே. பிரேமா கட்டுரை அளித்துள்ளார். ஓசை ஒலியெலாம் எவ்வாறு தோற்றம் பெறுகிறது என்பது தொடங்கி இசையின் பல்வேறு கூறுகளும் அவை தோன்றும் இடம், காலம், அதன் மருத்துவ பயன்பாடுகளையும் தெளிவுறுத்தியுள்ளார். அகக் கரணம் புறக்கரணங்களில் இசை பிறக்கும் நிலைகளைத் தெளிவுறுத்தி இசையில் நன்மை தீமைபயக்கும் ஒலிக் கூறுகளையும் குறிப்பிட்டு, கேட்கும் செவியோடு உடம்பையும் அவைபாதிக்கும் நிலைகளையும் எச்சரித்துள்ளார். நல்லிசை இன்பமும் உடலுக்கு நலமும் பயக்கும்; அபசுரம் தீங்கு பயக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. செவிப்பறைகளை கிழிக்கும் இன்னா ஓசைகளைத் தவிர்த்தல் நல்லது. தெருக்களில் கூட்டம், விழாக்கள் நடத்துபவர்கள் மின்ஒலிப் பெட்டிகளை அளவுக்கு அதிகமான பேரோசையுடன் வைத்து மக்களுக்கு இழைக்கும் தீங்கு எல்லையற்றதாகும். அதனைத் தக்க நடவடிக்கை மூலம் தடுத்தல் மக்கள் நலத்திற்குகந்த நற்செயலாகும்.

கவிஞர், திடியன் பெ. சிவராமன் அவர்கள் "நான்கு தமிழ்ச் சங்கம்" என்னும் தலைப்பில் தமிழ்ச் சங்க வரலாற்றையும் நான்காம் தமிழ்ச்சங்கத்தின் செயல்பாடுகளையும் அரிதின் முயன்று சிறந்த கட்டுரை ஒன்று அளித்துள்ளார். தமிழ்ச் சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி, செயல்திட்டம் ஆகியவற்றை ஆற்றொழுக்கான இனிய நடையில் எழுதியுள்ளது பாராட்டுக்குரியதாகும்.

"குறுந்தொகை காட்டும் வாழ்வியல் கூறுகள்" என்னும் த்லைப்பில் ஆய்வாளர் மு. லோகநாயகி எழுதியுள்ள கட்டுரை சிறப்பாக அமைந்துள்ளது. குறுந்தொகையில் ஆழங்கால் பட்டு மனம் ஒன்றிக் கட்டுரை அளித்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

சிவசம்புப் புலவரின் பாற்கர சேதுபதியின் `நான்மணிமாலை விளக்கவுரையுடன் இடம் பெறுகிறது.

இசை மருத்துவம்

மரு.முனைவர்.சே. பிரேமா எம்.டி. பி.எச்.டி.,
பேராசிரியர்–தலைவர்
சித்த மருத்துவத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

இசை என்பது செவி வழியாகச் சிந்தைக்குப் புலனாகி உயிர்களுக்கு இன்ப துன்பங்களை விளைவிக்கும் ஒரு கலை; செவிப்புலனுக்குரிய பொருள் நாதம் அல்லது ஓசை அது முக்கூறாக அமையும். விண்வெளி, காற்று, கடல், மலைச்சாரல், மழை முதலியவற்றின் இயற்கை இயக்கத்தினின்று வெளிப்படும் நாதம் ஓசை எனப்படும். இடி, நில நடுக்கம் பெருவெள்ளம், புயற்காற்று, பறவை, விலங்குகளின் வாயாலும் நடையாலும் விளையும் நாதம் ஒலி எனப்படும் ஓசை ஒலிகளை ஓரளவைக்கு உட்படுத்தி ஏற்றம் இறக்கம் நெளிவு சுளிவுகளோடு மக்கள் குரலால் வெளிப்படுத்தும் நாதம் இசை எனப்படும்.

ஓசையும் ஒலியும் இயற்கை, இசை இயற்கையுள் செயற்கை. இவ்வாறு இயற்கையும் செயற்கையுமாக ஓசை ஒலிகளைச் செயற்கையாக எழுப்புமிடத்து அது கலை எனப்படும். ஓசையை யாழ் முதலிய நரம்புக் கருவிகளாலும் குழல் கொம்பு முதலிய துளைக் கருவிகளாலும் ஒலியை தோற்பறை – கஞ்சிராக்கருவி கை முதலிய தாளக் கருவிகளாலும் இசையை மக்கள் கண்டம் மூக்கு ஆகிய உறுப்புக்களாலும் எழுப்புதல் வழக்காகும். இம் மூவகைகளையும் பொதுவாகத் தமிழில் இசை என்றும் வடமொழியில் கீதம் என்றும் கானம் என்றும் கூறுவர்.

ஓசையும் ஒலியும் நிலம், நீர், காற்று, நெருப்பு என்னும் பூதக் கூறுகளால் அமைந்து ஆகாய பூதத்தால் வெளிப்படுவனவாகும். உயிர் உடம்புகள் யாவும் பஞ்ச பூதக் கூறுகளால் அமைந்தவை. அவற்றுள் நீர், காற்று, நெருப்பு என்னும் பூதக் கூறுகளின் செயற்பாட்டமைப்பினை ஐ,

வளி, பித்து என்றும் சிலேத்துமம், வாதம், பித்தம் என்றும் கூறுவர். இவை சமன்பாடு திரிந்து அளவு கூடினும் குறையினும் உடம்பில் நோய் அல்லது பிணிகளை உண்டாக்கும். "மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளி முதலா எண்ணிய மூன்று" என்பார் திருவள்ளுவர்.

இனி ஓசை ஒலிகளாகிய நாதக்கூறுகள் அகமும் புறமுமாக உள்ள உடம்புகளை வளப்படுத்தலையும், நோய்ப்படுத்தலையும் மருத்துவ நோக்கிற்காணின் இசை மருந்தாக அமைவதைக் காணலாம்.

வைகறையில் கடற்கரையில் உலாவருதல்—காலையில் பூங்காக்களில் உலாவருதல் புரியுமிடத்துக் கடலலை ஓசைகளையும் தென்றலின் சலசலப்போசைகளையும் செவி மடுத்தனுபவிக்கலாம். மற்றும் குழந்தைகளின் மழலைப் பேச்சு சோலை பூங்காக்களில் சிட்டு, நாகணவாய்ப்புள், கிளி, குயில் முதலிய பறவைகளின் கூக்குரல்களை அனுபவிக்கிறோம். இவை மனத்திற்கு மகிழ்ச்சி தருவதை உணர்கிறோம். பல்வேறு விழாக்களின் வாயிலாக நரம்புக் கருவி குழற்கருவி தோற்கருவி கஞ்சிராக்கருவிகளின் செயற்கை இசைகளும் மக்களின் வளமான குரலிசையும் அவ்வாறே களிப்பையும் உவகையையும் தந்து இன்புறுத்தலை உணர்கின்றோம்.

சூறாவளி, பேரிடி, பெருமழை, பெருநெருப்பு எழுப்பும் ஓசைகளும், உற்றார் உறவினர் இடுக்கணுற்று வாய்விட்டெழுப்பும் அச்ச ஒலிகளும், பேரிழப்பினால் நேரும் அழுகை ஒலிகளும் மனத்திற்குத் துன்பத்தையும் வெறுப்பையும் தந்து உடம்பை நோய்ப்படுத்துவதையும் உணர்கின்றோம். கொடிய விலங்குகள் எழுப்பும் ஒலி அச்சத்தையும் நடுக்கத்தையும் உண்டாக்குவதைக் காண்கின்றோம். சிறு விலங்குகள் எழுப்பும் ஒலியால் அவற்றின் இன்ப துன்பங்களை உணர்கிறோம். குழந்தைகளின் அழுகையால் தாய் அதன் நிலையை உணர்கின்றாள்.

தொட்டிலிற் கிடக்கும் குழந்தை திடீரென சப்தமிட்டு அழுகிறது. கணவன் மனைவியைப் பார்த்துக் குழந்தைக்குப் பசிக்கிறது போலும்

எழுந்து பால்கொடு என்கிறான். பசியில்லை சிறுநீர் கழித்திருக்கும் ஈரம் பட்டு அழுகிறது என்று கூறிச் சென்று நனைந்த துணியை மாற்றி வேறு துணி விரித்துப் படுக்கையிற் கிடத்துகிறாள். குழந்தை அழுகையை நிறுத்திவிட்டது. சிறிது நேரத்தில் மீண்டும் அதே போல் வீல் என்று கத்தி அழுகிறது. கணவன் பால் கொடுத்து வா என்கிறான். மனைவி பசியில்லை எறும்போ மூட்டைப் பூச்சியோ கடித்திருக்கிறது என்று ஓடிச் சென்று குழந்தையைத் தூக்கித் துணிகளை உதறிவிட்டுப் படுக்க வைக்கிறாள். குழந்தை அமைதியாகிறது. சிறிது நேரத்தில் மீண்டும் அழுகிறது. தாய் பால் குப்பியுடன் சென்று பாலூட்டிப் படுக்க வைக்கிறாள். பால் உண்ட பின்னும் அழுகிறது. தாய் தொட்டிலில் இட்டு இசையோடு தாலாட்டுகிறாள். குழந்தை உறங்குகின்றது.

குழந்தைக்கு நேர்ந்த இடையூறுகளை அதன் அழுகைக் குரலைக் கொண்டு காரணத்தைத் தாயால்தான் உணரமுடியும். பசியைப் போக்கப் பாலூட்டிய தாய் உறக்கத்தைக் கொள்ளத் தாலாட்டுகிறாள். பால் பசிக்கு மருந்தாகிறது. தாலாட்டு சோர்வுக்கு மருந்தாகிறது.

நோயுற்றவர்கள் முதலுதவி மருந்தாக மேற்கொள்பவை ஓசை ஒலிகளே. சிறு தலைவலி நேரும்போது சொச்சொச்சோ என முனகுகிறான். சிறுவலி வயிற்று வலி அப்பப்பா என்கிறான். காதுவலி ஐயையய்யோ என்கின்றான். பல்வலி குக்குக்கும் என முனவுகிறான். இங்ஙனம் நோய் மூளும்போது நோயுற்றவன் எழுப்பும் ஓசை ஒலிகள் சாந்தியைத் தருகிறது. அழுதால் துன்பம் குறைதலை ஒவ்வொருவரும் அறிவர். ஒப்பாரிப்பாட்டு இழவுத் துன்பத்திற்கு மருந்தாகிறது.

வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பது வழக்கு மொழி. எனவே ஓசை ஒலிகள் பிணியைக் குறைக்கவும் தவிர்க்கவும் உதவும் என்பதற்குத் தடையில்லை. வெகுண்டவன் வெடிபடப் பேசினால் வேகங்குறையும். அச்சமுற்றவன் ஆரவாரமாகப் பாடினால் அச்சம் விலகும். வாழ்த்தொலிகள் மகிழ்வையும் வசை ஒலிகள் துன்பத்தையும் தரும் என்பதை யாவரும் அறிவர். மண வீட்டில் முழங்கும் இசை இன்பத்தை மிகுவிக்கும். இழவு வீட்டில் எழும்ஓசை ஒலிகள் துன்பத்தைக்

குறைக்கும். திருவிழாக்களில் மேளதாளம் வேட்டு அதிர்வெடிகள் இடம்பெறக் காரணம் அதுவேயாகும்.

போர்க்களத்தில் சங்கநாதமும் கொம்போசைகளும் பறை அடிமுழக்கமும் பாண்டு வாத்தியங்களும் வீரர்களை ஊக்கப்படுத்திக் கிளர்ச்சி எழச் செய்கின்றன. வெற்றி முரசு உவகைக் களிப்பை உண்டாக்குகிறது. பிரபஞ்சத்தின் பேராற்றலை இறைவனாகக் கூறும் அப்பரடிகள் "ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே" என்கிறார். நம்பியாரூரர் ஏழிசையாய் இசைப்பயனாய் இறைவன் திகழ்கிறான் என்கிறார். வைதிகச் சமயக் கடவுளர் எல்லாம் யாதானும் ஓர் இசைக் கருவியுடன் தொடர்புடையராக இருப்பதைக் காண்கிறோம். இராவணன் இசையினால் கைலாசபதியின் கருணையைப் பெற்றான். அகத்தியர் இராவணனைக் கந்தர்வ இசையால் பிணைத்தார். போரில் சங்க நாதம் செய்து மடிந்தவர்களை எழுப்பினான் கண்ணன் என்னும் புராண இதிகாச உரைகள் இசையின் சிறப்பைப் புலப்படுத்துவனவேயாகும். இத்தகைய இசை முக்குணங்களாலும் முத்தோடங்களாலும் மக்களிடம் உண்டாகும் அகப்புறப் பிணிகளைப் போக்கும் என்பதில் வியப்பொன்றுமில்லை.

உடம்பிற்கும் இசைக்கும் உள்ள தொடர்பு

இருவகை உடம்பினையும், உறுப்புக்கள் பிறப்புறுப்புப் பகுதியான மூலாதாரம், வயிறு, மார்வு, தலை இவற்றைப் பத்துவகை நாடிகளும், வாயுக்களும் இயக்குகின்றன. உடற் பொருள்கள் தசை, எலும்பு, தோல், மச்சை, நரம்பு, குருதி, மூளை முதலியவையாகும். மூலாதாரம் சுவாதிட்டானம், மணி, பூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களுமாக அமைந்துள்ளன. உடம்பைக் காக்கும் கவசங்கள் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம் ,ஆனந்தமயகோசம் என ஐந்தாக அமைந்துள்ளது. நாடி, நரம்பு, வாயுக்களின் தூண்டலால் மூலாதாரத்தினின்று எழும் ஓசை ஒலிகள் ஈறாகிய வாக்கு நான்கு நிலைகளில் வெளிப்படும். அவையாவன சூக்கு மமாகிய நுண்ணோசை *சந்தியினிடமாகத் தோன்றிப் பைசந்தி* என்னும் நினைவோசையாய் நெஞ்சினில் தங்கி மத்திமை என்னும் மிடற்று ஓசையால் குரல்வளையில் உருக்கொண்டு வைகரி என்னும் செவிப்புலனாம் ஓசை வாயுறுப்பால் வெளிப்படும்.

இசை நூலார் இசையாகிய நாதம் நீர், நெருப்பு என்னும் இரண்டின் சேர்க்கையால் உருவாகும்; அது ஆகதம் அநாகதம் என இருவகையாக நிகழும் என்பர். அவற்றுள் ஆகதம் என்பது சுருதி, சுரம் முதலிய கமகங்களுடன் வெளிப்பட்டு செவிப்புலனால் உணர வரும் என்றும், அநாகதம் என்பது சித்தந் தெளிந்து சிவமயமாக விளங்கும் ஞானயோகியரால் அகத்தே உணரப்படுவது என்றும் கூறுவர்.

ஆகதம் என்னும் நாதம் ஐந்து நிலைகளில் அமைந்து வெளிப்படும் என்பர். அவை சந்தியில் நிலை கொள்ளும் சூக்கும நிலை, நெஞ்சில் நிலை கொள்ளும் அதிசூக்கும நிலை, கண்டத்தில் நிகழும் வியத்த நிலை வாயுறுப்புக்களில் நிலை கொள்ளும் அவ்வியத்த நிலை என்பனவாகும். மூலாதாரத்திற் கருக்கொண்டு உந்தியினிடமாகத் தோன்றி வெளிப்படும் நாத இசை இடகலை பிங்கலை நாடிகளில் இயங்கி விலாவலமாக முதுகினிற் பரவி பாடல் வழியாக மூளையில் உருப்பெற்று இறங்கி உந்தி நெஞ்சு கண்டங்களினின்றும் இசையாக வெளிப்பட்டுச் செவிப்புலனாகும்.

அதாவது ஒலி நயத்தோடு வெளிப்படும் இசை உடம்பிற் பரவி பிரமாந்திர உச்சிவரை சென்று மீண்டும் கண்டத்தினின்று குரல்வளை நரம்புகளின் அசைவால் வெளிப்படும். இதனைப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் இசைவாது வென்ற படலத்துள்

"இடையினோ டேனைப்பிங்கலை யியக்கம்
இகந்து மூலந்தொடுத்தியங்கி
நடுவுறு தொழிலால் பிரமாந்திராந்தம்
நடைபெற இசைக்கும் உள்ளான" (பா–32)

என்கின்றார். எனவே, இசை என்பது அகக் கரணங்களாகிய மனம் புத்தி சித்தம் அகங்காரம் நான்கையும் இயக்கிப்பருவுடம்பு முழுதும் பரவி வெளிப்படும் செயற்பாடுடையது என்பது விளங்கும். அம்முறையான இசையானது நோயை ஆக்கவும் நீக்கவும் வல்லதாக அமைகிறது. இன்னாத இசையும் அபசுரங்களும் சில பண்களும் நோயை ஆக்கும்.

சுருதி ஒழுங்கும் தாள லயமும் கூடிய பண்ணிசைகள் நோயை நீக்கும் என நல்லிசைப் புலவர்கள் கண்டுரைத்தனர்.

சுரங்களின் ஆற்றல்

கருநாடக இசைநூலார் சுரங்களை சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என வகுத்து ஏழு கூறாக அமைத்தனர். அவற்றைச் சுருக்கி சரிகமபதநி என்பர். பண்டைத் தமிழ் நூலார் இவற்றை முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பர். இவற்றின் ஓசை ஒலியமைப்பும் ஒற்றுமைக்குரலும் வருமாறு:

சட்ஜம்	: ஸ் - ஊஷ்மான வளியிசை	- சங்கு, வண்டு, மயில்
ரிஷபம்	: ர் - உருட்டொலி உயிர்ப்பொலி	- குயில், கிளி, ரிஷபம்
காந்தாரம்	: க் - கமகந்தரும் தொண்டை ஒலி	- மயில், குதிரை, ஆடு
மத்திமம்	: ம் - உறீங்காரம் மூக்கொலி	- யானை, கொக்கு
பஞ்சமம்	: ப் - மூடித் திறக்கும் உதட்டொலி	- புரவி, குயில், தவளை, மயில்
தைவதம்	: த் - தடை செய்யும் தாள ஒலி	- அன்னம், பசு, குதிரை
நிஷாதம்	: ந் - நிரவல் செய்யும் மூக்கொலி	- காடை, ஆடு, யானை.

ஏழு சுரங்களும் துருவம், மட்டியம் முதலிய எழுவகைத் தாள ஒலிகளுக்கு ஏற்ப மெலிவு, சமம், வலிவு என்னும் அளவைகளோடு வெளிப்படுமிடத்து நாடி நரம்புகளையும், தச வாயுக்களையும் தாக்கும். ஆதலால் வாத பித்த சிலேத்துமங்கள் திரிபுற்று நோய் ஆக்கத்தையும் நீக்கத்தையும் ஏற்படுத்துகின்றன. ஏழு சுரங்களும் 22 சுருதி பேதங்களை எய்துமிடத்து அவற்றவற்றிற்கேற்ப மனநிலை திரிபுறுகின்றது. அழுக்காறு அவா, வெகுளி, பசி, தாகம் முதலிய குணங்கள் நிலை மாறுகின்றன. அம்முறையில் இசை உடம்பில் மாறுதலைச் செய்வதால் இசை மருந்தாகின்றது.

சுரங்களின் அளவாலும் பேதங்களாலும் பண்கள் இராகங்கள் நூற்றுக்கணக்காக விரிகின்றன. பண்டைய இசை நூலார் பண்களை 103 ஆக வகுத்தனர். பின்னர் மேளகர்த்தா ராகங்கள் 72 என்றும் அவற்றினின்றும் பன்னூறு ராகங்கள் பிறக்கும் என்றும் வகுத்தனர்.

பாற்கர சேதுபதி நான்மணி மாலை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஆசிரியர்
யாழ்பாணம், நல்லூர் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்,
உரைவிளக்கம் இரா. சதாசிவம்
செந்தமிழ் ஆசிரியர்.

கலித்துறை

“ஆமாரி யென்னக் கிருபணர்ப் பாடி யகம்புழுங்கி
காமா ரிருணக் கடன்மூழ்கி யெய்த்திடு ஞான்றெதிர்ந்து
காமாரி யன்புடைப் பாற்கர சாமியைக் காணவின்னே
போமாரினுஞ்சிறப்பீரென்றகாளைமெய்ப்புண்ணியனே”. (22)

“கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை” என்பது நாயனார் திருவாக்கு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனையும் இறைவன் அடியார்களையுமே பாடி மகிழ்ந்தார். சிவசம்புப்புலவரும் அத்தகு சீலமுடையவர். சிவசம்பந்தமுடைய பெரியவர்களையே பாடும் இயல்பினர். அதனால் புலவர்களை நோக்கிக் கல்வி கேள்வி இல்லாத கீழ் மக்களைப் பாடி மனம் வெதும்பி அல்லல் கவலையில் அழுந்த வேண்டாம் என அறிவுறுத்துகிறார்.

அருள் வழங்கும் காமாட்சி அன்னையை ஒத்த அன்புடையவர் பாற்கரசாமி வள்ளல் அவனைக் கண்டு போற்றுங்கள் என்று புலவர்களை ஆற்றுப்படுத்துகின்றார்.

சிவசம்புப் புலவர் போல பாற்கரசேதுபதியின் புகழைப் போற்றி அந்த நாட்களில் தமிழ்ச் சங்கப் புலவர் ஆற்றுப்படை இலக்கியம் பாடிய பெரும்புலவர் குலாம் காதிர் நாவலராவார். அவருடைய புகழ் மொழியை ஈண்டு குறிப்பிடுவது சாலப் பொருத்தமாக இருக்கும். அப்புலவர் பெருமகன்,

“இரவலர்க்கு அடையா வாயில் புரவலன்
கோதுபதி ஒடுக்கும் பாற்கர சேதுபதி
அருளொடு நிலை இயர் பொருள் நனியுதவ”

எனப் பாற்கரசேதுபதி இரவலர்க்கு அருளொடு விளங்கும் அடையாநெடுங் கதவுடைய புரவலன் என்பதைக் குறிப்பிடுகின்றார். பாற்கரசேதுபதி செல்வத்துப் பயன் ஈதல் என்னும் பண்புணர்ந்த பெருமகன் என்பது பலரும் உணர்ந்து போற்றிய உண்மையாகும். அவன் மெய்ப்பொருள் *தேற்றமும் புண்ணிய நற்குணங்களும் வாய்ந்த அருளாளன்.* அவனைக் கண்டு பொருள் பெற்று மகிழுங்கள் என்று புலவர்களை ஆற்றுப்படுத்துகின்றார். சங்க காலத்தில் புலவராற்றுப்படை என்னும் திருமுருகாற்றுப் படைபாடியவர் நக்கீரர். திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டுள் ஒன்றாகும். நாவலர் குலாம் காதிர் மகாவித்துவான் என்னும் கல்வித் தகுதியுடையவர்; அவருக்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் பாண்டித்துரைத் தேவர் தலைமையேற்ற அரங்கில் நக்கீரர் என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது என்பது ஈண்டு நினைவு கூறத்தக்கது. மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப்படை என்னும் கவியரங்கேறிய நூலில் பாற்கர சேதுபதியைக் குறித்த நன்மொழியே மேலே குறிப்பிட்டுள்ள பாடலடிகளாகும். குலாம் காதிறு நாவலரும் சிவசம்புப் புலவரும் வெவ்வேறு சமயம் சார்ந்த சூழலவராயினும் இருவருக்கும் தமிழ்ச் சூழல் ஒன்றேயாகும். இருபெரும் புலவர்களும் பாற்கர சேதுபதியை ஒருசேரப் புகழ்ந்து பாமாலை புனைந்திருப்பது பாற்கர சேதுபதியின் தமிழ்ப் பணிக்கும் புண்ணிய வாழ்விற்கும் சூட்டிய பாமாலைகளாகவே உலகம் உணர்ந்து இன்றும் போற்றுவது கண்டு இன்புறத் தக்கதாகும்.

விருத்தம்

"புண்ணிய முழுதும் புரிந்தபுண் ணியமாய்ப்
பொங்கிருந் தவஞ்செய்த தவமா
யெண்ணியல் சைவம் புரிந்தமெய்த் தவமா
யிலங்குமிவ் வெழில்வடி வத்தை
விண்ணியல் கரத்து முத்துரா மலிங்க
வித்தகன் மேற்செய்த தவத்தி
னண்ணிய துங்கப் பாற்கர சாமி
நரேசனாய்ப் புடவிநா டியதே". (23)

புலவர் இப்பாடலின் கண் முத்துராமலிங்க சேதுபதி மழையொத்த கொடைத்தடக்கையால் ஒருவித்தகம் செய்தான் என வியக்கிறார். அவன்

செய்த அவ்வித்தகமும், புண்ணியம் செய்த புண்ணியமும், தவம் செய்த தவமும், சைவமும் ஒருங்கிணைந்து ஒரு வடிவமாகிப் பாற்கரசேதுபதி என்னும் சான்றோனை இப் புண்ணிய பூமி விரும்பிப் பெற்றது.

ஆசிரியர் பாற்கரசேதுபதியைப் புண்ணியம் முழுதும் ஒருங்கிணைந்து ஆற்றிய புண்ணியப் பொருள் என்றும் தவம் செய்த தவம் என்றும் சைவம் புரிந்த மெய்த்தவம் என்றும் புகழ்ந்துரைக்கின்றார். இப்புகழ் மொழிகள் கற்பவர் சிந்தனைக்குரியதாகும்.

செய்த புண்ணியம் பண்ணிய பயிரில் தெரியும் என்பதும் தவமும் தவமுடையார்க்கு ஆகும் என்னும் சான்றோர் கூற்றும் ஈண்டு நினையத்தக்கதாகும். முத்துராமலிங்க சேதுபதி தம் பெயர் விளங்கச் செய்த தவப்பயனே பாற்கர சேதுபதி என்பது புலவர் கருத்தாகும்.

அகவல்

"நாடெழி லிராம நாத புரத்தா
னேடுறு மலர்த்திரு விசைந்தபொற் புரத்தான்
காண்டகு சிகரக் கந்தமா தனத்தான்
மாண்டவ முதிர்வினில் வாய்ந்தமா தனத்தான்
கனகங் கவிக்கருள் கைக்கந் தரத்தா
னனகனக் கத்தொடை யறாக்கந் தரத்தான்
வதனமாந் தண்ணளி வழியம் புயத்தான்
முதமளிக் கருணறா முல்லையம் புயத்தான்
காரிகை யார்விழிக் காவிக் குடையான்
காரிகை யார்தருங் காவிக் குடையா
னகுலனு மதித்திட நடாய்வரும் பரியான்
பகர்வரு வெம்பழி பாவம் பரியா
னவமணிப் பொன்முடி நகுமத் தகத்தான்
சிவமணி நீற்றாத் திருமத் தகத்தான்
றடநிகர் பெருமிடற் றந்தா வளத்தான்
றடநிரை வயல்கெழூஉந் தந்தா வளத்தா
னொன்னலர் சிரமுடி யுழும்பதத் துணையான்
றுன்னுமன் பர்க்குச் சுகவிதத் துணையான்
மரனிணை விழிகவர் மாசுந் தரத்தான்

பெரியவ ரனைவரும் பேசுந் தரத்தான்
றருமமெய்ப் பாற்கர சாமி
பொருவகன் மன்றமேபுண்ணிய மன்றமே". (24)

திருமகள் விரும்பி உறைகின்ற தாமரைமலர் போன்ற அழகும் ஒளியும் நிறைந்த இராமநாதபுரத்தைத் தலைநகராக உடையவனும் கந்தமா தனம் என்னும் புண்ணிய மலையை உடையனுமாகிய பாற்கர சேதுபதி நற்றவம் முதிர்வினால் பெற்ற எல்லையற்ற அருட்செல்வத்தை உடையவன். அப்பெரியோன் தன் அரசவையில் கவியரங்கேறிய புலவர்களுக்குப் பொற்காசுகளைப் பரிசாக அளிக்கும் வள்ளன்மையுடையவன்.

அரசர் ஆட்சிச் செல்வமுடையவராயினும் அருள் உடையவராக விளங்குதல் அவர்க்குச் சிறப்பாகும். நம் பாற்கரசேதுபதி உயர் பிறப்பாளனாகையால் முகத்தில் அன்பொழுகும் நகையும் தண்ணளியும் பெருகி வழியும் பெருமகன் என ஆசிரியர் போற்றுகின்றார். மணம் கமழும் முல்லை மலரைப் போல அருள்மணம் பரப்பும் இயல்பும், கண்டார் காமுறும் தண்ணென் சாயலும், காரிகையார் இவரைக் கண்ட மாத்திரத்தில் இவர் அழகில் மயங்கிக் காவியடையும் காம நோயும் உறுவர். பாற்கரசேதுபதி அரசர்க்குரிய குதிரையேற்றம் முதலானப் படைப்பயிற்சியும் இளமையிலேயே கற்றுத் தேர்ந்தவராவார்.

மக்கள் கொடுங்கோலன் எனத் தூற்றாது செங்கோல் நெறி காத்துப் பழிபாவங்களுக்கு அஞ்சித் திருவருள் துணையோடு ஆட்சி நடத்தும் இயல்பினன். சிவநெறிபோற்றித் திருநீற்றுச் செல்வத்தை விரும்பி நெற்றியில் அணிந்து விளங்கும் தோற்றப் பொலிவுடன் எப்போதும் விளங்கினார்.

செய்கபொருளை என்றும் அதுவே செறுநர் செருக்கு அறுக்கும் படை என்றும் திருவள்ளுவர் அறிவுறுத்துவார். நம் சிவசம்புப் புலவரும் சேதுபதி நாட்டின் வளத்தைக் குறிப்பிடும்போது நீர்நிலைகள் மலிந்து "தடநிரை வயல்கெழுஉந் நந்தா வளத்தான்" எனவும் அதுவே பகைவர்க்கு அச்சத்தை ஏற்படுத்தி அவர்களைப் பணிய வைக்கும் படை என்பதையும் எடுத்துரைக்கின்றார். மான்களின் விழியை ஒத்த பெண்கள் விரும்பும் பேரழகன் ஆயினும் அவனுடைய பேரழகை விட அவனுடைய கல்வியும் ஒழுக்கமும் மேலோங்கி நிற்றலினால் பெரியவர்கள் நெஞ்சில் இடம்

பெற்று அவர்கள் போற்றும் தகுதியுடையவராக விளங்கினார். திருவள்ளுவர் ஒழுக்கத்து நீத்தவர்களைப் பெரியர் என நீத்தார் பெருமையில் குறிப்பிடுகிறார்; அத்தகு பெரியவர்கள் விரும்பும் ஒழுக்கமும் கல்வி கேள்வியுமுடையவராகப் பாற்கரசேதுபதி வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பாற்கர சேதுபதியை ஆசிரியர் "தருமமெய்ப் பாற்கரசாமி" எனப் போற்றுவது அவருடைய அறநெறி வழுவா வாழ்வையும் பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருளைச் சார்ந்த மெய்ப்பொருள் தெளிவையும் பெற்றுச் சான்றோர் பாராட்டும் பாற்கர சாமியாக விளங்கினார் என்பதைத் தெளிவுறுத்துகிறது. பாற்கரசேதுபதி ஒருமுறை திருவாவடுதுறை மடத்திற்கு வருகைபுரிந்தார். அவருடைய வருகையைப் போற்றும் வண்ணம் மிக்க வேலைப்பாடு அமைந்த அரண்மனை போன்ற தஞ்சாவூர் வேலைப்பாட்டுடன் கூடிய பந்தல் ஒன்று தென்னங்கீற்றால் அமைக்கப்பட்டதாகவும் அதனைப் பார்க்கப் பலநாள் அப்பகுதி மக்கள் திரண்டு வந்ததாகவும் ஒரு செய்தியுண்டு. அவர் வந்து அங்கு வீற்றிருந்து போனபின்பும் பலநாள் அவர் பெருமை கருதியும், பந்தலின் அருமை கருதியும் அப்பந்தல் பிரிக்கப்படாமல் இருந்தாகக் குறிப்பிடுவர். துறவிகளும் அவருடைய வருகையை இவ்வண்ணம் போற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பாற்கரசாமி வீற்றிருக்கும் மன்றம் ஒப்புமை இல்லாப் புண்ணியமன்றம் எனப் போற்றுவது உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை என்பது மேற்குறித்த குறிப்புகளால் தெளிவாகும்.

வெண்பா

"மன்னியசீர்ப் பாற்கரமான் மாராச னானவன்றே
முன்னிலவச் சைவ முறையை வைத்தான் - றன்னிகர
நாட்டினா னல்லவரை நாட்டிலே செங்கோலாற்
காட்டினா னொன்னலர்க்குக் காடு" (25)

பாற்கரவேளின் வாழ்வு அமரவாழ்வு; அதனை உணர்ந்தபுலவர் மன்னிய சீர்ப் பாற்கரன் எனப் போற்றுகிறார். மன்னுதல் நிலைபேறுடைய புகழ்க்குரிய காரணங்களால் ஒருவன் என்றும் நினைக்கப்படுதலாகும். பாற்கரசேதுபதி இம் மண்ணுலகில் தமிழும் சைவமெய்நெறியும் நிலைப்பெறச் செய்ததனால் புலவர் நாவின் புகழ் மொழிக்குரியன் ஆயினன். ஈண்டுச்செங் கோல் என்றது பாற்கரவேள் மக்கள் நல அரசை நிலைநிறுத்தி உயிர்களின் துன்பத்தைப் போக்கினான் என்பதாகும்.

கலித்துறை

"காடேறி போமினி யேறோ மலையிற் கடற்கலத்திற்
றாடேறு மன்பருட் சேக்கு மறுமுகன் றன்னருளாற்
றோடேறு தார்முடிப் பாற்கர சாமித் துரையைக்கண்டு
நாடேறி யாயிடை வீடேறி வாழுவ நற்சுகத்தே". (26)

இக்கலித்துறையில் ஆசிரியர் ஆற்றுப்படை இலக்கியப் பொருளை நான்கு அடியில் எடுத்துரைக்கிறார். சிவசம்புப் புலவர் கடல்கடந்த ஈழ நாட்டைச் சேர்ந்தவர். அதனால் காடும் மலையும் கடலும் கடந்து இனித்துன்புற வேண்டியதில்லை; பாற்கரவேளைக் கண்டு நிதிக்குவையோடு வீடும் பெற்று நாட்டில் இனிது வாழ்வோம் எனத் தன்னை ஒத்த புலவர்களை அழைக்கின்றார். இப்பாடலில் ஆறுமுகக் கடவுளின் அருள்நலத்தைச் சிறப்பிக்கின்றார். திருவள்ளுவர் நல்லினம் என்பார்; சைவர்கள் சத்சங்கம் என்பர்; உயர்ந்தோர் இனத்தோடு வாழ்வதற்கு முற்பிறவியின் நல்வினைப் பயனும் முருகனுடைய அருளும் வேண்டும். முற்பிறப்பில் தீவினை செய்த தீவினையாளர்களுக்கு இப்பிறவியில் தீயோர் தொடர்பும் துன்பமும் நீங்கா இடற்படுத்தும் என்பது நூல்களின் துணிபு. அதனால் சிவசம்புப் புலவர்முருகனுடைய திருவடியை உறுதிப் பொருளாகப் பற்றி நிற்கும் அடியவர்களுக்கு முருகன் அருள் முன்நின்று உதவும் எனக் குறிப்பிடுவது எண்ணி நினைவில் கொள்ள வேண்டிய உண்மையாகும்.

விருத்தம்

"சுகந்தரு மொழியு மணிவட நீறு
துலங்கிய தோற்றமும், பொறையு
முகந்தரு மிருந்தண் ணளியுமெய்ப் பொடிப்பு
முகிழ்நிலா நகையுமென் னோக்கு
மகந்தரு கனிவு மரும்பெருங் கொடையு
மாருயிர் மாட்டெழு மருளுஞ்
சகந்தரு புகழ்மைப் பாற்கர மன்னற்
சார்ந்ததுந் தவத்தினிற் றவமே". (27)

பாற்கர மன்னரின் அருங்குணங்களும் செயல் உறுதியும் உலகம் முழுவதும் கொடுத்தும் கொள்ளத்தக்க புகழ்மை எனப் போற்றுவது உளம் கொள்ளத்தக்க விழுப்பொருளாகும். பழி எனின் உலகுடன் பெறினும்கொள்ளலர் எனச் சான்றோர் மாட்சியைப் புறநானூற்றில்

பாண்டியன் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி பாராட்டுவான். பாண்டியர் குடியை ஒத்த பழங்குடி கெழீஇய மரபு சேதுபதி மரபு; ஆகையினால் பாற்கர சேதுபதியும் அத்தகைய விழுமியங்களைத் தம் வாழ்வுக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்துள்ளான். இன்றைய சமுதாயத்தில் இளைஞர்களும் அரசியல் மற்றும் பிறதுறைகளில் நீதி செலுத்துபவர்களும் சிந்திக்க வேண்டிய அரும்பொருளாகும்.

பாற்கர சேதுபதி தன்னடைந்தவர்களிடத்தில் இனிய சொற்களையே பேசுவார்; அதனை ஆசிரியர் சுகந்தரு மொழி எனக் குறிப்பிடுகிறார். அவருடைய தோற்றம் அருள் வழங்கும் கண்டார் விரும்பும் திருநீற்றுப் பொலிவுடன் விளங்கும். பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது பழமொழி. நம் பாற்கர சேதுபதி பொறையுடைமை என்னும் இலக்கணம் அமைந்து செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்பாளர். அவர் தம்மைப் பார்க்க வந்தவர்களிடத்து தயையும் நகையும் இன்சொல்லும் உடையவராகக் காட்சி தருவார். அவருடைய முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் தங்கள் கவலை நீங்கி நிலவினைக் கண்ட அல்லிமலர்போல மகிழ்வர்; அதனை ஆசிரியர், "முகிழ்நிலா நகை" எனப் போற்றுகிறார். பாற்கர சேதுபதியின் இப்புறத்தோற்றம் எல்லாம் அவருடைய அகத்தில் முகிழ்த்த அன்பின் வெளிப்பாடாகும். அகத்தில் அன்புடையவர்க்கே இத்தகைய கனிவும் அருளும் வெளிப்படும். இதனைத் தமிழ், அகத்தின் அழகு முகத்தில் தெரியும் எனப் போற்றும். பாற்கரசேதுபதி ஈரநெஞ்சம் உடையவர்; ஈர நெஞ்சின் வெளிப்பாடு உயிர்கள்மாட்டு கருணையும் பேரருளுமாகும். ஆசிரியர் உயிர்களை ஆருயிர் என்றும் ஆருயிர்களிடத்தில் இவர் கொண்டுள்ள இரக்கத்தை அகந்தருகனிவு என்றும் தண்ணளி என்றும் மெய்ப் பொடிப்பு எழும் அருள் என்றும் பலவாறு பாராட்டுவது பாற்கர சேதுபதியின் ஈகைப்பண்பு அவருடைய உயிரோடு கலந்து ஒன்றிய அருள் உணர்வின் வெளிப்பாடு என்பதை நாம் அறிதற் பொருட்டேயாகும். பாற்கர சேதுபதி உயிர்களை ஆருயிர் என நேசித்தார். உலகவர் உயிர்களை உயிராக மதிப்பதில்லை; அருள் உடையவர்களே உயிர்களை ஆருயிர் என்றும் மன்னுயிர் என்றும் போற்றுவர். அதனால் தான் இராமலிங்க வள்ளலாரும், ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும் என்று

மன்றாடினார். நம் பாற்கரசேதுபதி அவ்வருளின் வெளிப்பாடாக அரும்பெரும் கொடையாளராக விளங்கியதோடு மதுரைத் தமிழ்ச் சங்கம் போன்ற அரியவற்றுள் அரியதையும் படைத்து அளித்தார். உலகம் முழுவதும் கொடுத்தாலும் ஈடாகாத புகழைத் தம் அருஞ்செயலால் பாற்கர சேதுபதி ஈட்டியுள்ளார். இத்தகைய புகழும் பெருவாழ்வும் மன்னரைச் சார்ந்தது தவத்தினில் தவம் என ஆசிரியர் போற்றுகின்றார். இத்தகு வாழ்வை கற்றலும் சிந்தித்தலும் மக்கள் வாழ்வை மேம்படுத்தும் என்பது திண்ணம். உலக வரலாற்றில் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களுக்கிடையில் அவர்களுடைய மொழி, சமயம், பண்பாடு, நாகரிகம், இசை ஆகிய வாழ்வியல் விழுமியங்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கொடுத்தவர் பாற்கர சேதுபதியைத் தவிர வேறு யாரும் உண்டா என்பது ஐயத்திற்குரியதேயாகும். இவரும் இவருடைய அண்ணன் பாண்டித்துரைத் தேவரும் அத்தகு அருஞ்செயல்களைச் செய்து நிலைத்த புகழை ஈட்டியுள்ளனர். அதனை உளம் கொண்ட மகாகவியாகிய சிவசம்புப் புலவர் கவின்மிகு யாப்பில் மாமனிதர்களைத் தம் கவிதையில் வரும் தலைமுறையினருக்குப் படைத்தளிக்கிறார். செயற்கரிய செய்த பெரியவர்கள் வாழ்க்கை இலக்கிய வடிவம் பெறுதல் வேண்டும்; வரும் தலைமுறையினர் கற்றுத் தம் வாழ்வைச் செப்பம் செய்துகொள்ள இவர்களுடைய வாழ்வின் உள்ளீடும் அருங்குணங்களும், அருஞ்செயல்களும் மங்கி மறையாமல் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதன் மூலம் நாம் நம் சமுதாயத்தில் அறிவார்ந்த சமூகப் பொறுப்புள்ள தூய்மையைக் கடைப்பிடிக்கின்ற தமிழ்த் தலைவர்களை உருவாக்க முடியும். செவ்வியல் கூறுகள் நிறைந்த அரிய மனிதர்களை எலும்பும் சதையுமாக உயிர்ப்புடன் காண்பது அரிது. அப்படிக் கிடைத்தவர்களே சிவசம்புப் புலவரின் கதாநாயகர்கள். அவர்களுடைய வரலாறு மீண்டும் மீண்டும் புதிய புதிய சொற்களில் யாப்பு வடிவம் பெறுதற்குரிய செவ்வியல் பண்புகள் பலவும் நிறைந்துள்ளன. அப்பெருமக்களைத் தமிழ் உலகம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளது.

அகவல்

தவாதுருள் பரிசனஞ் சார்தலி னிரவுந்
திவாவு மொளியறாத் திருவநீள்வீதியும்
வீதிக டொறுந்தொறு மேவின ரெளிதுண
வாதரத் துதவிடு மன்னசத் திரமுங்
கண்ணீர் கால்பொரக் கதிநூ லாய்ந்துணர்

வெண்ணீற் றடியவர் விழைந்தமர் மடமுந்
தாவறு மேத்திய சைவநிலை நின்றவர்
மேவிடுஞ் சங்கர விலாசமா ளிகையும்
பூவடி கன்றிடப் புயங்கொளும் புனிதநீர்க்
காவடி மாக்கள்வாழ் கவினியல் சாலையு
மெங்குள பொருள்களுமீங்குள வீங்குள
வங்கில வெனுந்தரத் தலகிலா வணமு
மொருதினத்தமுதென வுறும்விருந்தினர்க்கு
வருதின மெலாமுணா வழங்கிடு மனைகளு
மரபுளிச் சிறார்பலர் மதிக்கணக் காயர்பால்
விரவுபு கற்றிடு வித்தியா சாலையும்
விழைவுறக் கவிபுகல் விபுதருக் கென்று
மழையென நிதியருள் வள்ளியோர் மனைகளுங்
கீழ்ந்தறை போகாக் கெழுதரு நிலையில்
வாழ்ந்திடு பலபடை மன்னவர் மனைகளும்
மிருசெவி சுடவர சியலிடித் திசைக்கும்
பொருவக லமாத்தியப் புலமையோர் மனைகளுங்
கண்ணஞ் சாது கடாவுரு வத்தொடுள்
ளெண்ண முகாதவொற் றியன்மனைத் தொகை
மாய்ந்தொளிர் கல்வி யறிவுரு வெனுந்திறம்
வாய்ந்துபண் புரைக்க வல்லவர் மனைகளு
மெண்ணுற லருங்கழு தெகின முறங்கினுங்
கண்ணுறங் காநகர்க் காவலர் மனைகளு
மழைவிழு திறத்துவா வழங்கிய மதத்திற்
குழைவிழ வதில்விழுங்கொடித்தேர்ச் சாலையு
மைந்தலால் வேறுமிங் கருங்கதி காட்டிடும்
வெந்திறன் முந்திய கந்துகப் பந்தியுங்
கடாமொரேழ் திறத்தவாய்க் கழையைச் சுழித்திடுந்
தடாமணி விலங்கனேர் தந்தியின் பந்தியுங்
கணக்கில் குலவிடக் கமஞ்சூன் முகினிரை
மணக்குறுங் கொடிகிளர் வானிலைச் சிகரியுந்
தள்ளியொன் னலரைச் சால்பெருங் கிடங்கிற்
புள்ளையு மெறிந்திடும் பொறித்தொடி யிஞ்சியுஞ்
சித்திர மாடப் பத்தியுங் குலவி

யித்தரை மான்முக மெனுந்திரு நகரி
லரிறபச் சிற்பநூ லனைத்துமுற் றாய்ந்து
விரிவுறும்பயல்வுடை விணைநுண் மாக்களாற்
காவியப் புலவர் கருத்தவை வெஃக
மீவியனும்பர்கள் விழிவிருந்தயில
வழகுருக்கொண்டென வமைந்தமா ளிகையில்
விழுமிய வோவிய விதம்பல நாட்டிப்
புக்கவர் கண்ணிணை புயக்கலாற்றாத
மிக்கநா னாவித விசித்திர விளக்குந்
திகந்தமளவுபுசேணினுமளாவுஞ்
சுகந்த நிலாவிய துணர்த்தொடை நிரையும்
பகற்சுட ராகப்பரிதிகள் பேரொளி
தகத்தரு முகுர சாலமு நிரப்பி
முயலுதி ரம்புரை முழுவிலைப் பட்டிற்
செயலுறு விதானந் திகழமே னிறுவி
யெழுமணி கதித்த முழுமணி பதித்த
துங்கந் தோய்ந்த தங்கம் வேய்ந்த
மங்கல ராம லிங்க விலாச
மென்ற தூய மன்ற மேய
மாற்றுயர் செம்பொ னேற்றணை யும்ப
ருன்னத முதலா வோரெழு திறமா
நன்னரினெடுத்து நாலெட் டாக
விலக்கண வாது மேதையோர் வகுத்த
விலக்கண மவையொருங் கியலுருவென்றுறீஇ
தருமமாந் தேவருள் சாந்தமெய் முதலா
வருமிதத் துணையெலா மருங்கினி னிலவச்
சயமிகு பாற்கர சாமிப்
பெயரினி லமைந்து பிறங்கிவீற் றிருந்ததே. (28)

இவ்அகவலில் புலவர் பாற்கரசேதுபதியின் தலைநகர்ச் சிறப்பை எடுத்துரைக்கிறார். ஒரு நாட்டின் சிறப்பு அதன் தலைநகர்க் கண் எடுப்பும் மிடுக்கும் மிக்கு விளங்கும். கலைவல்லவர்களும் அரசியல் துறை வல்லார்களும் வேறு பல்துறைகளில் சிறந்து விளங்கும் மேன்மையுடையவர்களும் தலைநகரிலேயே விரும்பித் தங்கள் மாளிகைகளை அமைத்துத் தங்கள் புகழ் விளங்க வாழ்வர். அதனால்

தலைநகரம் ஒரு நாட்டின் மணிமுடி போலச் சிறப்புற்று விளங்குகிறது. தலைநகர் ஒளிவீசிப் புகழ்மிக்கவர்கள் வாழுமிடமாக மற்ற நகரங்களை விடச் சிறப்புறுகிறது.

அவ்வகையில் இராமநாதபுரம் பாற்கர சேதுபதி காலத்தில் மிடுக்குடன் விளங்கிய பெற்றியை ஈண்டுக் காணலாம். மதுரை மாநகர் தூங்கா நகரம் என இலக்கியங்களில் போற்றப்படும்; நாளங்காடியும் அல்லங்காடியும் பகல் இரவு என்று பாராது ஓயாது வாணிகம் நடைபெறுவதால் மக்கள் பயன்படுத்தும் வண்டிகளும் இரவு விளக்குகளும் ஒளி வெள்ளம் பாய்ச்சும்; அது போல பாற்கர சேதுபதி நகரம் ஒளிவிளக்குகளால் நிறைந்து ஒளி வெள்ளத்தில் மூழ்கிக் காண்போரை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்துகிறது.

செல்வம் மிகுந்து வளம் நிறைந்த நகரமாக இருத்தலின் செல்வர்கள் அன்னச்சத்திரம் அமைத்து நகருக்குப் புதிதாக வருபவர்களுக்கு உணவு அளிக்கும் வழக்கம் சேதுபதி தலைநகரில் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். சேதுநாட்டின் தலைநகரில் கல்வி கேள்வி மிக்கச் சான்றோர் பலரும் மடங்கள் அமைத்துக் கொண்டு மெய்ப் பொருள் தேடல் உடையவர்களாக வாழ்ந்தனர். அவர்கள் திருநீறு அணிந்து திருவேடப் பொலிவுடன் அகத்தில் அன்பு ஊற்றின் வெளிப்பாடாக மெய்ப் பொருட் செய்திகளையும் மெய்யடியார் வரலாற்றையும் ஆயுந்தோறும் கண்ணீர் மழையென வடித்துத் திருவடியும் *நனையும் வண்ணம் அருள் உணர்வுடன் விளங்கினர்.* இதனைத் திருவாசகம்,

"யானே பொய் என் நெஞ்சம் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே"

என அறிவுறுத்தும். மணிவாசகர் மற்றோரிடத்தில், "பொய் யாய செல்வத்தே புக்கு அழுந்தி மெய்யாக் கருதிக் கிடந்தேனை" எனவும் குறிப்பிடுவார். பொய் நீங்கி உண்மை தெளிந்த மெய்யுணர்வாளர்கள் பொய்மையிலிருந்து தங்களை விடுவித்த இறையருள் திறத்தை வியந்து அவனுடைய பெருங்கருணைத் திறத்துக்கு வேறு கைமாறு இன்மையால் கண்ணீர் வடித்துத் தங்கள் அன்பின் திறத்தையும் நன்றிப் பாங்கையும் காட்டுவர்.

சேது நாட்டின் தலைநகரில் சங்கர விலாசம் என்பது அருளாளர்கள் இருந்த புகழ் மிக்க மாளிகையாகும். அங்கு சைவ

சிகாமணிகள் பலரும் இருந்து புகழ் பரப்பியதால் முனிவர்களும் அவ்விடத்தை நேசித்தார்கள். தீர்த்த யாத்திரையாளர் பலரும் கொணர்ந்த புனித நீர் பெற்று இன்புறும் மக்கள் கூட்டம் அங்கு நிரம்பி வழிந்தது. காசி முதல் இந்தியாவின் பல்வேறுபகுதியினரும் தீர்த்த யாத்திரையாக இராமேச்சுரம் வந்த வண்ணம் இருப்பர். இந்திய நாட்டின் பல்வேறு மொழி இன மக்கள் பலரையும் ஒருசேர இராமநாதபுரத்தில் பார்த்து இன்புற முடியும். இதுவரைச் சான்றோர் பலரும் நிறைந்து மாநகர் அருள் நிலையமாக இருக்கும் திறத்தை ஆசிரியர் எடுத்துரைத்தார். இனி அந்நகரின் சமூக வாழ்க்கையை எடுத்துரைக்கின்றார். ஆவண வீதி எனப்படும் கடைத்தெருக்களை எடுத்துரைக்கிறார். எல்லாப் பொருள்களும் கிடைக்கும் வண்ணம் வணிகர்கள் மக்கள் தேவையறிந்து, கொள்வதும் மிகைகொளாது, கொடுப்பதுவும் குறைபடாது, பல பண்டம் பகர்ந்து விற்பனை செய்யும் மரபு வழுவாத வணிகர் வீதிகள் சிறப்புற விளங்கின என எடுத்துரைப்பது கருதற்பாலது. ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் முதுகு எலும்பு போன்றவர்கள் வணிகர்கள் ஆவர். அதனால் திருவள்ளுவர்,

> "*வாணிகம் செய்வார்க்கு வாணிகம்பேணிப்*
> *பிறவும் தமபோற் செயின்*", எனப்போற்றுவார்.

நடுவு நிலைமையை வலியுறுத்தும் திருவள்ளுவர் குறிப்பாக வணிகர்களைக் குறிப்பிடுவது மற்றப்பிரிவினர்க்குப் பொதுவாக நடுவுநிலைமை வேண்டற்பாலது என்பதும் வணிகர்களுக்கு நடுவுநிலைமை இன்றியமையா அறம் என்பதும் வலியுறுத்தியவாறாம்.

விருந்தோம்பல்:

இல்வாழ்வானுக்கு இன்பம் விருந்தோம்பலேயாகும். செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் பண்பினர் பலர் வாழும் நகரம் என ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். பண்டைக் காலத்தில் உணவு விடுதிகள் குறைவு; வழிப்பயணம் நடந்தே செல்ல வேண்டியிருக்கும். அதனால் மக்கள் ஆங்காங்கு தங்கி விருந்து அயர்ந்து செல்வர். செல்வர்களும் அத்தகைய புதிய விருந்தினர்களை எதிர்பார்த்து உணவு சமைத்து விருந்திடுவர். இக்காலத்தில் பண்டை மரபுகள், காண்பதற்கு அரிதாகி விடுவதால் இந்நூலாசிரியர் குறிப்பிடும் செய்திகள் பலவும் மிகையாகத் தெரியலாம். ஆனால் ஆசிரியர் குறிப்பிடும் அனைத்தும் வரலாற்று உண்மையாகும்.

அக்காலத்தில் மரபு வழிக் கல்வி சிறு வயது முதல் குழந்தைகளுக்கு நல்லாசிரியர்களால் கற்பிக்கப்பட்டு வந்தது. அதற்குரிய பள்ளிக்கூடங்கள் சிறப்புற விளங்கின. அயலார் ஆட்சி வந்தபின்பு அவர் ஆதிக்கத்தினால் மரபு வழித் தமிழ்க் கல்வியும் எண்ணும் எழுத்தும் மறைந்து ஆங்கிலக் கல்வி பரவிற்று; அதன்வழித் தமிழ், தமிழ் நாகரிகம், பண்பாடு, கலை அனைத்தும் சிதிலம் அடைந்தன. மக்களுடைய மகிழ்ச்சிக்குரிய கலைகளும் தொழில்களும் சிதைந்து தமிழர் வாழ்வு சீரழிந்தது. கண்ணை விற்று ஓவியம் பெறுவதுபோல நம்முடைய நாகரிக வாழ்வையும் பண்பாட்டையும் இழந்து ஆங்கிலம் கற்றுப் பொருளீட்டுவதே வாழ்வு என மக்கள் மயங்கினர்.

புலமைச் செல்வம்:

அறிவை விரும்பிப் போற்றும் வள்ளல்கள் பலரும் வாழ்ந்த திருநாடு நம்முடைய நாடு. மக்கள் வாழ்க்கை மேன்மையுற வேண்டும் எனில் அவர்களுடைய செவிகளில் நற்செய்திகள் உயர்ந்த மொழிகளில் மனம் கொள்ளும் வகையில் எடுத்து இயம்பப்பட வேண்டும். மாசற்ற சில சொற்களில் கேட்போர் நெஞ்சில் நீங்கா இடம்பெறும் வகையில் அவர்களுடைய உணர்வை மேலோங்கச் செய்து வாழ்வை மாண்புறச் செய்வது கவிதை. அரிய செய்திகளைப் பொதிந்து வைத்திருக்கின்ற கவிதைச் சொற்செல்வமே வாழ்வை நிலைபேறுடையதாகச் செய்கிறது. அத்தகைய கவிகளுக்கு உலகம் என்றும் நன்றி பாராட்டுகின்றது. கவிதைச் செல்வர்களுக்கு வள்ளல்கள் உலக நன்மையின் பொருட்டும் தாம் பெற்ற கலைச் செல்வத்தைப் பாராட்டுவான் பொருட்டும் செல்வத்தை வழங்குகிறார்கள். அத்தகைய சான்றோர் பலரும் வாழும் மனைகள் பல முகவையில் உண்டு என ஆசிரியர் பாராட்டுவது பண்டைத் தமிழகத்தின் வாழ்வு உணர்த்தியதாகும்.

அரசியல் செருக்கு:

அரசியல் கருமம் நடத்துவோர் பெருமிதவுணர்வுடையவர்களாக விளங்குதல் இன்றியமையாததாகும். தற்தகைமை உணர்ந்து எத்தகைய சூழலிலும் நாட்டுப்பற்றுடையவர்களாக விளங்குதல் அரசுக்குப் பெருமையும் அரசு அங்கத்திற்கு மாண்புமாகும். பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் இன்றி அரசைப் பாதுகாக்கும் படைச்செருக்குடையவர்கள் வாழ்கின்ற மனைகள் அந்நகருக்கு அணியாக விளங்குகின்றன.

பெரியாரைத் துணைக்கோடல்:

இடித்துரைக்கும் பெரியவர்களே அரசனுக்கு உற்ற பாதுகாப்பாகும்; அதனால் மன்னன் செவிகைப்பச் சொற்பொறுக்கும் அறிவினன் ஆதல் நாட்டுக்கு நலம் பயக்கும்.

ஒற்று:

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை ஆதலின் அரசன் நன்மை தீமைகளை விரைந்து அறிந்து அதற்குரிய தீர்வு காணுதல் வேண்டும். பிறர் அறிவதற்கு முன் ஒற்றினால் அரசன் அறிந்து செயல்பட வேண்டுமென்பது அரசியல் நெறியாகும். அரசன் சூழ்ச்சித்திறம் மிக்க ஆற்றல் சால் நிபுணர்களைத் தேர்ந்து பணியமர்த்துதல் இன்றியமையாததாகும். ஆய்ந்து தெளிந்தகல்வி, அறிவு, தோற்றம் என்னும் சிறப்பினை எடுத்துரைக்கும் அரசச் சுற்றம் அரசனைச் சூழ்ந்து இருத்தல் இன்றியமையாததாகும். அத்தகைய அறிஞர் பலரும் வாழும் மனைகள் அவன்நகரின் கண் சிறந்து விளங்குகிறது என ஆசிரியர் குறிப்பிடுவது அந்நாட்டின் அரசியல் சிறப்பை எடுத்துரைப்பதாகும்.

அவனுடைய தலைநகரில் பேயும் கழுகும் கூட இரவில் தூங்கும்; அவனுடைய காவலர்கள் கண்ணுறங்காது கடமை ஆற்றுபவர்கள் என எடுத்துரைப்பது காவற்றிறம் போற்றியதாகும்.

தேரோடும் வீதிகளில் செல்லும் தேர்களின் உச்சியில் பறக்கும் கொடிகள் மழைமேகம் எனக் கதிரவனின் ஒளியை மறைக்கும் வண்ணம் நிழல் பரப்புவது காண்போரை வியப்பில் ஆழ்த்துகிறது. வலிமையும் வேகமுமுடைய குதிரைகள் வரிசைவரிசையாக அணிவகுத்துச் செல்லும் காட்சி காண்போரை மிரள வைக்கிறது. மலைகளை ஒத்த யானைகள் படாம் அணிந்து விளங்கும் காட்சியும் காண்போர்க்கு இன்பம் தந்து அவனுடைய தலைநகரம் மாட்சிமையுற்று விளங்குகிறது. அவனுடைய தலைநகர் தேர், குதிரை, யானைப் படையொடு காலாட் படைகளும் நிறைந்து பெருமிதம் அளிக்கிறது. மழைகோர்த்த முகில் வரிசை வரிசையாகத் தவழ்வதுபோல தலைநகரில் கோபுரங்களில் கொடிகள் தவழ்கின்றன. பாதுகாப்புமிக்க தலைநகராகையால் கோட்டைகளில் இயந்திரப் பொறிகள் பொருத்தப்பட்டுள்ளன. அவை பகைவர்களைக்

கொன்று கிடங்கில் வீழ்த்தும் ஆற்றல் வாய்ந்தனவாகும். வரிசை வரிசையாகச் சித்திரமாடங்கள் அமைந்து திருமகள் தலைநகரம் என்னும் வண்ணம் எழில் நிறைந்து விளங்குகிறது.

சிற்பமும் சித்திரமும்:

சேதுபதி அரசர்கள் கலைஞர்களைப் பேணும் இயல்பினர்; அதனால் மரபு வழியாக கலை வல்லுநர்கள் பலரும் தலைநகரில் வாழ்ந்து வருகின்றனர். சிற்ப நூற்கலையைக் குற்றமறத் தேர்ந்த கலைஞர்கள் வடித்துள்ள சிற்பங்கள் காவியம் படைக்கும் புலவர்களையும் தம்மாட்டு ஈர்த்துக் கவிபாடச் செய்கின்றன. தேவர்களும் விரும்பும் அழகுடைய மாளிகையில் விழுமிய பொருள் விளக்கும் ஓவியங்கள் பல ஓவியர்களால் தீட்டப்பட்டுள்ளன. அவ்ஓவியங்கள் பார்ப்பவர் கண்களை வேறு திசையில் திருப்ப முடியாமல் தம் பக்கம் வைத்திருக்கின்ற அழகுடையவை. வீடுகளில் பல்வகையான வேலைப்பாடு அமைந்த விசித்திர விளக்குகள் பார்ப்பவரைப் பார்த்துக்கொண்டே இருக்கும்படியாக அணி செய்யப்பட்டுள்ளன. பட்டினால் அலங்காரம் செய்யப்பட்டுச் சாளரங்கள் வண்ணம் பெற்றுள்ளன.

தங்கத்தில் மணிகள் பதித்த சிமிழ்களும் குமிழ்களும் ஆங்காங்கு இராமலிங்க விலாசம் என்னும் அரசர் வதியும் மாளிகையை ஒளிவீசச் செய்கிறது என மன்னர்வாழும் சூழலையும் கலைமலிந்த பொலிவையும் ஆசிரியர் கவிநயம்பட எடுத்துரைத்துள்ளார்.

மணிமாளிகையாகிய இராமலிங்க விலாசம் என்னும் அரண்மனையில் முப்பத்திரண்டு இலக்கணங்களும் அமைந்த சீரர்ளனாகவும் தரும நெறிகளுக்குள் உயர்ந்தவையாகிய சாந்தம், மெய்ம்மை ஆகிய குணங்கள் சிறந்து நிற்க வெற்றிமிகு பாற்கரசாமிப் பெரியோன் அரசு வீற்றிருந்து நாடுபுரந்தனன் என ஆசிரியர் அவனுடைய நகர்ச் சிறப்பையும் ஆளுமைச் சிறப்பையும் அழகுற எடுத்துரைக்கின்றார்.

வெண்பா

"இருந்தமிழும் வெண்ணீறு மேறியுல கெங்கும்
பொருந்தவரம் வேண்டிப் புவிமான் - றிருந்தப்
புரிந்ததவத் துக்கோ புகழ்ப்பாற் கரனைத்
தெரிந்துதவி னானஞ் சிவன்".

"உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே", என்பது தொல்காப்பியம். அக்காலத்தில் சான்றோர் பலரும் தமிழும் சைவமும் புரந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று எண்ணிப் பெரும் தவம் செய்தனர். தமிழ் உயர்ந்த அறிவுச் செல்வத்தையும் கலைச் செல்வத்தையும் இலக்கிய வடிவிலும் அறிவியல் K. மருத்துவம், வானியல் நூல் வடிவிலும் தன்னுள் பாதுகாத்து வைத்துள்ளது. தமிழ் மொழியின் ஆழமும் பரப்பும் உணர்ந்து மக்கள் கற்றுக் கலையும், பண்பும், நாகரிகமும் நிறைந்த உயர்ந்த வாழ்க்கையை உறுதிசெய்து கொள்ளத் தவறி திசை மாறி அயல்மொழி ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டனர். சொந்த மொழியையும் நாகரிகத்தையும் கலைவாழ்வையும் அறியாது சிதைந்து அழிந்தனர். மக்கள் திருவெண்ணீற்றுப் பெருமையையும் மந்திரம் ஆவது நீறு என்ற ஞான சம்பந்தர் வாக்கும் அறிந்திலர். கலைஞர்களையும் தமிழறிஞர்களையும் போற்றித் தமிழர் நெறியை நீடு நினைந்து பாதுகாத்தற்குரியார் தோன்றவில்லை என பலரும் வாடினர். வாடியதவத்தின் விளைவே பாற்கர சேதுபதியின் தோற்றமாகும். அவரைச் சேதுநாட்டின் காவலனாகக் கல்விகேள்வி மிக்க பழங்குடியில் சிவனருள் தோற்றுவித்தது எனப் புலவர் சிவசம்பு வியக்கின்றார்.

சிவனுக்குப் பாற்கர சேதுபதியால் கிடைத்த பயன் தமிழும் சைவமுமாகும். சிவன் விரும்பித் தமிழ்ச் சங்கத்திற்குத் தலைமையேற்றான். சிவன் நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனக்கிழி தருமிக்கு அருளினான்; தன்னைச் சைவன் என்று பாராட்டுதலை விரும்பினான். சிவனே விரும்பும் தமிழும் சைவமும் உயிர்க்கு உறுதி பயப்பது என்பது ஆன்றோர் ஆய்ந்துகண்ட உண்மை; அதனை மக்கள் மறந்து கீழ்நிலை அடைந்து நிலை தாழ்ந்து போவதைத் தடுக்கவும் தமிழையும் சைவத்தையும் பாதுகாக்க ஒரு பெரியோன் வேண்டும் என்னும் ஆன்றோர் தவமே பாற்கர சேதுபதியாகத் தோன்றினார். இவர் தவத்தில் விளைந்த தவம் எனலாம். கம்ப நாட்டரும் சீதையைக் குறிப்பிடுங்கால் தவமெனும் தவமாம் தையல் என்றனர். இருந்தமிழ் என நூலாசிரியர் குறிப்பிடுவதும் இருந்தமிழே உன்னால் இருந்தேன் என உ.வே.சா. குறிப்பிடுவதும் நினைக்கப்படும்.

(தொடரும்)

குறுந்தொகை காட்டும் வாழ்வியல் கூறுகள்

மு. லோகநாயகி,
முனைவர்ப் பட்ட ஆய்வாளர்,
தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சங்க இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வைத் தெளிவாகப் புலப்படுத்துவன. உள்ளதை உள்ளவாறு உரைப்பது இவ்விலக்கியங்களின் தனித்தன்மையாகும். சங்க இலக்கியம் தமிழின்அரிய அற்புத மாமணிப்பேழை.

நவநிதியக்குவியல் அவை சமுதாயத்தின் அகம் மற்றும் புற வாழ்வினைத் தெள்ளத் தெளிவாக உள்ளதை உள்ளபடி காட்டும் கண்ணாடி. உள்ளதை உள்ளவாறு உரைப்பது இவ்விலக்கியங்களின் தனித் தன்மையாகும். பண்டைய தமிழர்கள் காதலையும், வீரத்தையும் இரு கண்களாகப் போற்றினர். இன்பம் பற்றி விரிவாக விளக்கும் குறுந்தொகையில் அக்காலத் தமிழ்ச் சமுதாயத்தின் அகவாழ்வியல் முறையும், குடும்ப முறையும் எவ்வாறு இருந்தது என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

இறைவழிபாடு

தமிழர்கள் அன்றையகாலத்திலிருந்து இன்றைய காலம் வரை இறை நம்பிக்கையில் ஈடுபாடு உடையவர்கள். இறை வழிபாடு என்பது மக்களின் உள்ளுணர்வோடு தொடர்புடைய ஒன்று. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் அடிப்படையில் அவரவர்களுக்கு விருப்பமான முறையில் அவ்வழிப்பாட்டினை நிகழ்த்தி உள்ளனர்.

வழிபடும் அடியவர் விரத காலங்களில் இறைவனின் பெயரால் தன்னை வருத்திக் கொள்ளல் இன்றைய நிலையிலும் இருத்தலை நாம் காண்கிறோம். இந்த மரபைக் குறுந்தொகையிலும் காணமுடிகிறது. பார்ப்பனர்கள் விரத காலங்களில் தனி வகையான உணவை உண்டனர், என்பது மரபாக இருந்து வந்துள்ளமையைப்,

"பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கி ன்நல்நார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே"

(குறுந்தொகை – 156)

என்னும் அடிகளால் விரத காலங்களில் படிவம் ஏற்பட நடைமுறையில் பலவிதமான உண்டி உண்ணும் மரபு இருந்துள்ளதைக் காணமுடிகிறது.

சமுதாயத்தில் பெண்ணுரிமை

பொருளின் அடிப்படையில் இயங்கும் இன்றைய உலகம், பெண்ணுரிமை என்பது, பெண்ணுக்குச் சொத்துரிமையில் தான் அடங்கியுள்ளதெனக் குறிப்பிடுகிறது. முழுமையான பெண்ணுரிமை என்பது, பெண் தான் விரும்புபவனையே வாழ்க்கைத் துணையாகக் கொள்ளும் சுதந்திரச் செயல்பாட்டில் தான் உள்ளது என்பதே உண்மை.

முன்பின் தெரியாத எந்த உறவும் சொந்தமும் இல்லாத இருவர் சந்தித்து, உளம் ஒன்றி கணவன் மனைவியான காதற்பிணைப்பை,

"ஞாயும் யாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே"

(குறுந்தொகை–40)

என்னும் பாடல் படம் பிடித்துக் காட்டுகிறது. காதல் மணம், குறுந்தொகை அக வாழ்வில் நிலவியிருந்தது.

களவுக்குப் பின்பே கற்பு மணம்

இயற்கையின் இன்னருளால் எதிர்ப்படும் தலைவியைக் கண்டு அவளின்அழகில் மயங்கி நலம் புனைந்துரைத்துத் தோழியின் துணையால் தலைவியின் அன்பைப் பெறும் தலைவன், தலைவி குறிப்பிடும் இடத்தில், தலைவி குறிப்பிடும் காலத்தில் சந்தித்து மகிழ்வான்.

இந்தக் களவு ஒழுக்கத்திற்குக் குறிப்பிட்ட காலஎல்லையுண்டு. களவை நீட்டித்தால், தோழியே தலைவனுக்கு அறம் உணர்த்தி, வாழ்வின் மரபினைக் காக்கச் செய்தாள். களவொழுக்கம் தடைப்படும்போது தலைவன் திருமணத்திற்குப்பொருள் தேட, வரைவிடைவைத்துப் பொருள் வயிற் பிரிந்து செல்வான். பொருள் ஈட்டி வந்து, முறைப்படி மணம் பேசி, இருவீட்டாரின் இசைவுடன், திருமணம் ஊர் அறிய நடைபெறும். இது குறுந்தொகைக் கால மணமுறை ஆகும்.

குறுந்தொகையில்பரிசம்

இன்று மணமகள், மணமகனுக்கு வரதட்சணை என்ற பெயரால் பொன்னும் பொருளும் கொடுப்பது எழுதப்படாத சமுதாயச் சட்டமாக உள்ளது. அன்று ஆண்தான் பெண்ணுக்குப் பரிசம் வழங்கினான். பெண் வீட்டார் மனம் மகிழும் அளவுக்குப் பரிசம் தந்தான். ஆடவன், பரிசப்பொருளைத் தன் பெற்றோரிடம் இருந்து பெறுவதில்லை. வேற்றிடம் சென்று, தொழில் புரிந்து அவனுடைய உழைப்பால்பெற்ற பொருளைத் தான் தலைவிக்குச் சீதனமாகத் தந்தான். வரைவு இடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல் துறை இதனைக் குறிப்பதாகும். இதுதான் குறுந்தொகைத் திருமண நடைமுறை.

மனைமாண்பு

அன்பு, அறிவு, ஆற்றல், உரு, ஆகிய பண்பு நலன்களால் ஒன்றுபட்ட தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் இல்லறத்தின் மாட்சியைக் குறுந்தொகையில் பல பாடல்கள் போற்றிப் புகழ்கின்றன. ஒரு பசுவினை மட்டுமே வளர்த்து, அதனால் வரும் வருமானத்தைக் கொண்டு எளிய வாழ்வு நடத்தி வந்த தலைவன் தலைவியை மணந்தநாள் முதலாகப் பெரு வாழ்வு பெற்று ஒவ்வொரு நாளும் விழாக்கோலம் பூண்ட வீட்டினனாகத் திகழ்கின்றான் என்று பெண்ணின் பெருமையினைக் கீழ்வரும் பாடல் கூறுகின்றது.

"ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே"

(குறுந்தொகை **295**)

இப்பாடல் பானை பிடித்தவள் பாக்கியசாலி என்னும் பழமொழிக்கேற்ப இலங்குகிறது எனில் மிகையல்ல.

அன்றைய வாழ்வின் கடமைகள்

"ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே" எனத் தொடங்கும் புறப் பாடலில் சமுதாயக் கடமைகள் யார்யார்க்கு என்ன எனக் கூறப்பெற்றுள்ளது. ஆடவனுக்கும் குறிப்பிட்ட பணி உண்டு எனக் குறுந்தொகை காட்டுகிறது. ஈதல், இசைபட வாழ்தல் அதற்கு வினையாற்றுதல் இன்றியமையாததாகும். அதனை

"ஈதலும்துய்த்தலும்இல்லோர்க்குஇல்லெனச்
செய்வினைக்கைம்மிகஎண்ணுதி'

(குறுந்தொகை 63)

என்னும் பாடல்வழி உணரமுடிகிறது.

"வினையே ஆடவர்க்குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென"

(குறுந்தொகை – 135)

மனையறம் வகுத்து நின்ற குறுந்தொகைச் சமுதாயத்தில் பொருள் தேடத் தன் தலைவியைப் பிரிந்து செல்லுதலும் வாழ்வியல் வழக்கமாக உள்ளதைக் காணலாம்.

வாழ்வியல் கூறுகள்

கற்பு வாழ்வில் வேற்று நாட்டிற்குச் சென்று பொருளீட்டும்பொழுது அங்குப் பரத்தையர்களின் வலையில் சிக்கிப் பொருளையெல்லாம் இழந்து தலைவன் வீடு திரும்பினான் என்ற மரபு இல்லை. கணவன் வழிதவறிச் சென்றான் என்பதற்காக மனைவி அவனை விட்டு விலகினாள் என்ற செய்தியும் இல்லை.

இல்லறத்தின் இடர்ப்பாடுகள்

அற்றை நாள் இல் வாழ்க்கை அன்பு மிகுந்தும் பண்பில் சிறந்தும் காணப்பட்டது. ஆயினும் இல்லறத்தில் சில இடர்ப்பாடுகளும் நிகழ்வதுண்டு. களவுக்காலத்தில் அன்பு மிகுந்து காணப்பட்ட தலைவன் பின்பு அவ்வன்பில் மாற்றம் ஏற்படுகிறது. இதனை,

"வேம்பின் பைங்காய் என் தோழி தரினே
தேம்பூங்கட்டிஎன்றனிர் இனியே
பாரி பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்

வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே"

(குறுந்தொகை–196)

என்ற பாடலால் உணரலாம். தலைவன் தலைவியிடம் கொண்டிருந்த அன்பு நீங்கிய காலத்து, அவளைத் தந்தை வீட்டில் கொண்டு போய் விடும் வழக்கம் இருந்தமையை குறுந்தொகை சுட்டுகிறது. இதனை,

'நீர்நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்
தணந்தனை ஆயின் எம் இல் உய்த்துக் கொடுமோ"

(குறுந்தொகை 354)

என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.

சுற்றம் ஓம்பல்

தலைவன் பரத்தையிற் பிரிந்த காலத்தும் தலைவி இல்லறச் சுற்றங்களைப் பேணி இல்லறக் கடமைகளைச் சிறப்பாக செய்து வந்தாள். இதனை,

"திருமனைப் பல்கடம் பூண்ட
பெருமுது பெண்டிரேம் ஆகிய நமக்கே"

(குறுந்தொகை 181)

என்ற பாடலால் சுற்றத்தை ஓம்பும் பண்பை அறியமுடிகிறது.

முடிவுரை

இல்லற வாழ்வில் தலைவன் தலைவியினது மனம் ஒன்றிய அன்பினையும் அவ்வன்பில் மாற்றம் நிகழ்வதையும் அறியமுடிகிறது. குறுந்தொகையில் காணப்படும் கற்புப் பொருண்மைப் பாடல்களால் தலைவி தலைவனது வருவாய்க்குத் தகுந்தபடி செலவு செய்து குடும்பத்தைப் பேணி, வளமுடையதாகச் செய்யும் இல்லறப்பொறுப்பு விளக்கப் பெறுகிறது. மனிதப் பிறப்பின் பொருளோ பிறர்க்கு உதவுவதுதான். இல்லறத்தின் இடர்பாடுகளை நீக்க, தலைவன் தலைவிபால் ஊடல் கொண்ட காலத்தில் அவளை தந்தை வீட்டில் கொண்டு விடும் வழக்கம் இருந்துள்ளமையை அறியமுடிகிறது.

நான்கு தமிழ்ச் சங்கங்கள்

கவிஞர் **திடியன் பெ. சிவராமன்** எம்.ஏ
திராவிட இயல் மாணவன்
திடியன்–அ, உசிலம்பட்டி,
மதுரை மாவட்டம் 625 529.

பாண்டிய மன்னர்கள் தமிழ் மொழியின் மீது கொண்ட அன்பின் மிகுதியாலும், ஆழ்ந்த பற்றுதலாலும் தங்கள் தலைநகரங்களில் சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தார்கள் என்று பல இலக்கியச் சான்றுகளின் வாயிலாகவும், செப்பேடுகளின் வாயிலாகவும், பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுக்கள் வாயிலாகவும் நாம் அறிகின்றோம். முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் ஆகிய முப்பெரும் தமிழ்ச் சங்கங்கள் அழிந்துபோன போதிலும் நான்காம் தமிழ்ச் சங்கம் இன்றும் இயங்கி கொண்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றே. தமிழ்ச் சங்கங்களைப் பற்றியும், சங்க வரலாற்றுச் செய்திகளைப் பற்றியும் அறிய பல இலக்கியச் சான்றுகள் உதவுகின்றன.

சங்கச் சான்றுகள்:–

1. கடைச் சங்கப் புலவராகிய சீத்தலைச் சாத்தனார்,

"புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க"

என மணிமேகலையில் கையாண்டுள்ளார். மற்றுமோரிடத்தில்

"பன்னீராண்டு பாண்டி நன்னாடு
மன்னுயிர் மடிய மழைவளமிழந்தது
புலவரை எல்லாம் வம்மின் யான் உங்களைப் புரந்தரகில் லேன்"

என்கிறார்.

இதன் மூலம் பாண்டியர்கள் சங்கம் வளர்த்தனர் எனத் தெளிவாகிறது.

2. முச்சங்கச் செய்திகளையும் வரலாறுகளையும் தனியொரு அகவற்பாவாலும், சிலப்பதிகாரத்தாலும், இறையனார் களவியல் உரைகளாலும் அறிய முடிகிறது. பிற்கால திருவிளையாடலிலும் சில சங்கச் செய்திகள் உள்ளன.

3. *"மதுராபுரிச் சங்கம் வைத்தும்*
மகா பாரதம் தமிழ்ப் படுத்தும்

எனச் செப்புகிறது சின்னமனூர் செப்பேடு– பாண்டியன் மெய்க்கீர்த்தி

4. *"தலைச் சங்கப் புலவனார் தம்முள்"* – பெரியபுராணம்

5. *"சங்கத் தமிழ் மூன்றும் தா"* – ஔவையார்.

6. *"புகலி ஞானசம்பந்தன் உரை செய்*
சங்கமலி செந்தமிழ்கள்"

– திருஞான சம்பந்தர் திருதேவூர்.

7. *"இமிழ்குரல்முரசம்மூன்றுடன்நாளும்*
தமிழ்கெழுகூடல்தண்கோல்வேந்தே

காரிக் கண்ணனார் – புறம் –58.

8. *"தொல்லாணை நல்லாசிரியர்*
புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன்"

– மதுரைகாஞ்சி 761–763.

9. *"தமிழ் நிலைபெற்ற தாங்கருமரபின்*
மகிழ்நனை மறுகின் மதுரை"

– சிறு பாணாற்றுப்படை 66–67

10. *"நிலனாவிற்றிரிதருஉம் நீண்மாடக் கூடலார்*
புலனாவிற் பிறந்த சொற்புதிதுண்ணும் பொழுதன்றோ !"

கலித்தொகை 3–5

11. *"சங்க முத்தமிழ்"* – ஆண்டாள் பெரிய திருமொழி

12. *"பாடு தமிழ் வளர்த்த கூடலின் வடாது"*

– புறத்திரட்டு – புகழ்மாலை

மேல் காணும் பல்வேறு இலக்கியச் சான்றுகளின் வாயிலாக முச்சங்கங்கள் இருந்த உண்மைகளை தெளிவாக உணரமுடிகிறது. மேலும் நக்கீரனாரின் இறையனார் அகப் பொருளுரையும் கடைச் சங்கம் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றது. இன்னும் பல ஆதாரங்கள் உண்டு. தலைச் சங்கம் அல்லது முதல் சங்கம் கி.மு. 5000–கி.மு.3000 வரை

பழம் பாண்டிய மன்னனான "காய் சினவழுதி" என்பவனால் முதல் சங்கம் நிறுவப்பட்டது. பழம் பாண்டி நாட்டின் தலைநகராக குமரியாற்றங்கரையில் வீற்றிருந்த தென் மதுரையில் முதல் தமிழ்ச் சங்கம்

அமைத்து தமிழை ஆய்ந்தனர். மன்னன் காய் சினவழுதி முதல் முதலாம் கடுங்கோன் வரை; 89 பாண்டிய மன்னர்கள் அச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்து தமிழை ஆய்தனர். 549 புலவர்கள் தமிழ்ச் சங்கத்தில் பங்கேற்றனர். அவர்களில் அகத்தியர் தலைசிறந்த புலவராய்த் திகழ்ந்தார். தென்மதுரையைத் தலைநகராகக் கொண்டு முதல்சங்கம் கி.மு.5000 முதல் கி.மு.3000 வரை ஏறக்குறைய 2000 ஆண்டுகள் சிறப்புடன் வளர்ச்சி பெற்று வந்தது.

அக்காலத்தில் ஈழம் பாண்டிய நாட்டின் ஒரே பகுதியாக இருந்தது. பகறுளியாற்றிற்கும் குமரிக் கோட்டிற்கும் இடையே இருந்த பெரும் நிலப்பகுதியே பாண்டியநாடு. இதன் தலைநகர் தென்மதுரை. ஏழுபனைநாடு, ஏழு தெங்கு நாடு, ஏழு முன்பாலைநாடு, ஏழு பின் பாலைநாடு, ஏழு மதுரை நாடு, ஈழ நாடு போன்ற 49 நாடுகள், மலைகள் ஆறுகள், காடுகள் கொண்ட நாடு பாண்டிய நாடு என அடியார்க்கு நல்லார் கூறுகிறார்.

திடீரென நிகழ்ந்த் கடற்கோளால் பக்றுளியாறும் பன்மலையடுக்கும், குமரியாறும், குமரிக் கோடும், தென்மதுரையும் முதல் தமிழ்ச் சங்கமும் முழுமையாய் அழிந்து கடலுக்குணவாயின. தரைப்பகுதிகளாக இருந்த பாண்டிய நாடு அழிந்து இந்துமகா சமுத்திரமாக மாறியது. தலைச் சங்கமும் தலைச்சங்க நூல்களும் அழிந்தன. பாண்டிய நாட்டுடன் பழமைவாய்ந்த லெமூரியாக் கண்டமும் அழிவுற்றது எனப் பேராசிரியர் ஹெக்கல் கூறுகிறார்.

இடைச்சங்கம் அ ல்லது இரண்டாம் சங்கம் கி.மு.3000 முதல் கி.மு.1500 வரை

முதல் சங்கமிருந்த தென்மதுரை அழிந்து போகவே மீண்டும் சங்கத்தை உருவாக்க எண்ணிய பாண்டிய மன்னன் கடுங்கோன் என்பவன் கபாடபுரத்தை அமைத்து அதில் இடைச்சங்கத்தை நிறுவி தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தான். இச்சங்கம் சுமார் கி.மு.3000 முதல் கி.மு.1500 வரை நிலை பெற்றிருந்தது. இச்சங்கத்தில் அவைப்புலவர்களாக தொல்காப்பியர், கீரந்தையர் போன்ற பெரும் புலவர்கள் வீற்றிருந்தனர். இவர்களுக்கு அகத்தியம் நூலாகத் துணைபுரிந்தது.

வால்மீகி ராமாயணம், வியாச பாரதம் போன்றவைகளின் வாயிலாக கபாடபுரத்தைப் பற்றிய பல செய்திகளை அறிய முடிகிறது. மேலும் கபாடபுரம் பாண்டியனின் தலைநகராக மட்டுமல்லாமல் கபாடபுரம் ஒரு சிறந்த துறைமுகமாகவும் திகழ்ந்தது.

"இவ்வகை யரசிற் கவியரங்கேறினார்
ஐவகை யரசர் ஆயிடைச் சங்கம்
விண்ணகம் பரவும் மேதகுகீர்த்திக்
கண்ணகல் பரப்பிற் கபாட புரமென்ப"

என்ற பழைய அகவற்பாவும் கபாடபுரத்தில் இடைச்சங்கம் இருந்த செய்தியைச் சுட்டிக் காட்டுகிறது.

இடைச் சங்க காலத்தில் பல இலக்கியங்களும், இலக்கண நூல்களும் வெளிவந்தன. அவைகளில் பெருங்கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, இசை நுணுக்கம், தொல்காப்பியம் போன்றவைகளாம். இதில் தொல்காப்பியம் தலைசிறந்த நூலாகப் போற்றப்பட்டது. கி.மு.1500 அளவில் ஏற்பட்ட கடற் கோளானது கபாடபுரம் இருந்த பகுதி முழுவதையும் அழித்து விட்டது. கடற்கோளால் பாண்டிய நாட்டையும், இரண்டாம் தமிழ்ச் சங்கத்தையும் இழந்ததோடு இடைச் சங்க இலக்கியங்களையும் இழக்க நேரிட்டது.

கடைச்சங்கம் அல்லது மூன்றாம் தமிழ்ச் சங்கம் கி.மு. 1500 முதல் கி.பி.25 வரை

கபாடபுரம் அழிவுற்ற அதேவேளை இடைச்சங்கமும் சேர்ந்தே அழிவுற்றது. அழிவுற்ற பாண்டி நாட்டையும் தமிழ்ச் சங்கத்தையும் மறுபடியும் மீண்டும் உருவாக்க எண்ணிய முடத்திருமாறன் என்னும் பாண்டிய மன்னன் தன்னாட்டிற்குள் கூடல் என்னும் மதுரை மாநகரை உண்டுபண்ணி மூன்றாம் தமிழ் சங்கமான கடைச்சங்கத்தை உருவாக்கினான். கடைச்சங்க காலம் கி.மு.1500 முதல் கி.பி.250வரை. இப்பொழுது உள்ள மதுரையில் கடைச்சங்கம் நிலைபெற்றிருந்தது என இறையனார் அகப் பொருளுரை கூறுகிறது. இச்சங்கத்தைப்பற்றி

செய்திகள் நமக்கு நிறையக் கிடைத்துள்ளன. கடைச் சங்கத்தில் 49 அவைப் புலவர்கள் தமிழாய்ந்துள்ளனர். அவர்களில் நக்கீரன், நல்லந்துவனார், சீத்தலைச் சாத்தனார் போன்றவர்கள் தலைசிறந்தவர்கள் ஆவார். கபிலர், பரணர் போன்ற பெரும்புலவர்களும் கடைச் சங்ககாலத்தவர்களே. இச்சங்கத்தில் தான் திருவள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றினார். சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளும் இச்சங்கத்தின் இறுதிக் காலத்தில் வாழ்ந்தவரே. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கடைச் சங்கத்தில் இயற்றப்பட்டவைகளே.

கடைச் சங்கத்தின் சிறப்புக்கள்:-

பழைய திருவிளையாடற் புராணத்தின் வாயிலாக சங்கப் பலகை என்ற ஒன்று இருந்த செய்திகளை அறியமுடிகிறது. மொழியறி சங்கப் பலகை என்றும் பாவறி சங்கப்பலகை என்றும் இருவகை சங்கப் பலகைகளை நமக்குத் தெரிவிக்கின்றது. பாடிக் கொண்டிருக்கும் பாடலை சங்கப் பலகை ஏற்றால்தான் புலவர் பெருமக்கள் அப்பாக்களைப் போற்றுவார்களாம். பாண்டியமன்னன் ஒருவன் கடைச்சங்கத்திலிருந்த நாற்பத்தொன்பது புலவர்களின் உருவங்களை சிலைகளாகச் செய்து நிறுவினானாம். ஒரு சமயம் பொய்யாமொழிப் புலவர் அச்சிலைகள் முன் நின்று பாடினாராம். அவர் பாட்டைக் கேட்டு ரசித்த அப்பதுமைகள் தலையசைந்ததாகப் பழஞ் செய்தி கூறுகின்றது.

கடைச் சங்கத்தின்அழிவு:-

சிறந்து விளங்கிய கடைச் சங்கமானது பாண்டிய மன்னன் உக்கிர பெருவழுதியின் காலத்திற்குப் பின் நிலவாது மறைந்தொழிந்தது. அவனுக்குப் பின் வந்த பாண்டியர்கள் சங்கம் நிறுவாது, தமிழை வளர்க்காது போயினர். காரணம், அரசியல் குழப்பங்கள் பல நிகழ்ந்தன.களப்பிரர்கள் படையெடுப்புக்கள், பல்லவர்களின் படையெடுப்புக்கள், பாண்டிய நாட்டில் பன்னீராண்டு கடும் பஞ்சம் காரணமாக சங்கப் புலவர்களைப் பாதுகாக்க முடியாமற்போகவே அவர்கள் சேர, சோழ நாடு நோக்கிச் சென்று விட்டனர். இச் சூழ்நிலையில்

கி.பி.3ஆம் நூற்றாண்டின் இறுதியில் சங்கம் அழிவுற்றது என இறையனார் அகப் பொருளுரை தெரிவிக்கிறது.

நான்காம் தமிழ்ச் சங்கம் – கி.பி.1901 முதல்

பிலவ ஆண்டு ஆவணித் திங்கள் 13ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை சித்திரை மீன் கூடிய நன்னாளில் 14–09–1901 பகல் 1.30 மணிக்கு மேல் 2–45 மணிக்குள் மதுரை சேதுபதி உயர்பள்ளி மண்டபத்தில் நான்காம் தமிழ்ச் சங்கம் பொன்பாண்டித்துரைத் தேவர் அவர்களால் நிறுவப்பட்டது. அதே நன்னாளில் 1. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, 2. பாண்டியன் புத்தகசாலை, 3. நூலாராய்ச்சி சாலை என்பனவும் தொடங்கப் பெற்றன.

சங்கம் தோன்றக் காரணங்கள்:–

முதல், இடை, கடையென்னும் முச்சங்கங்களும் அழிவுற்று சிதைந்தன. கடைச்சங்க பாண்டிய மன்னன் உக்கிர பெருவழுதிக்குப் பின் கி.பி. 250ல் கடைச்சங்கம் முழுமையாய்ச் செயல் இழந்து விட்டது. பண்டைய நாளில் தமிழ் மொழிக்கும், தமிழ்ச் சங்கத்திற்கும் இருந்து வந்த ஏற்றத்தையும், பின்நாளில் தமிழுக்கு ஏற்பட்ட தாழ்வையும் எண்ணி வருந்திய பாண்டித்துரைத் தேவர், மீண்டும் தமிழ்ச் சங்கம் அமைத்து தமிழ் நிலை ஏற்றம் பெற்று பண்டைய நிலைக்கு உயர வேண்டும் என்னும் பேரார்வப் பெருக்கால் சுமார் 1651 ஆண்டுகளுக்குப் பின் 1901ம் ஆண்டில் மதுரை மாநகரில் நான்காம் தமிழ்ச் சங்கம் அமைத்தார்.

1. நான்காம் தமிழ்ச் சங்கம் பொழுது போக்குக்காகவோ, பொருள் ஈட்டுவதற்காகவோ, அரசியல் செல்வாக்குப் பெறுதற்காகவோ அமைக்கப்பட்ட அமைப்பு அல்ல.

2. அரசின் பொருட்கொடையையோ, பல்கலைக் கழகங்களின் நல்குதலையோ எதிர்பார்த்து தொடங்கப்பட்டதும் அல்ல.

3. தமிழ் மொழி வளர்ச்சிக்காவும், முச்சங்கம் கண்டு முன்பு தமிழ் மொழி பெற்றிருந்த உச்ச நிலைக்கு மீண்டும் உயர்த்த வேண்டும்

என்ற நன்னோக்கோடு உருவாக்கப்பட்ட சங்கமே நான்காம் தமிழ்ச்சங்கம்.

தொடக்க நாளிலே உருவாக்கப்பட்ட சங்கத் தீர்மானங்கள்:-

நான்காம் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவிற்கு மன்னர் பாற்கர சேதுபதியவர்கள் தம் பரிவாரங்கள் புடைசூழ வந்திருந்தார். சேதுநாட்டு அவைப் புலவர்களும் பாண்டித்துரைத் தேவர்தம் அவைப் புலவர்களும் குழுமினர். பெரும்புலவர்களாகிய உ.வே. சாமிநாதையர், சடகோப ராமாநு சாச்சாரியார், ராகவ ஐயங்கார், பரிதிமாற் கலைஞர், சண்முகம்பிள்ளை பின்னத்தூர் நாராயண சாமி ஐயர் முதலியோர் பெருவிருப்புடன் விழாவிற்கு வந்திருந்தனர். மதுரை மாநகரமே விழாக்கோலம் கண்டது சங்கத் தொடக்க நாளிலேயே கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. தமிழ்க் கல்லூரி உண்டாக்குதல்.
2. தமிழ் ஏடுகளை அச்சிட்டு பயன்படுமாறு தொகுப்பது.
3. வெளிவராத அரியநூல்களை அச்சிட்டுப் பரப்புதல்
4. வடமொழி, ஆங்கில நூல்களை தமிழில் மொழி பெயர்த்தல்
5. தமிழ்க் கல்வி பற்றிய "செந்தமிழ்" இதழ் வெளியிடுதல்
6. தமிழில் தேர்வு நடத்தி பட்டமும் பரிசும் வழங்குதல்
7. தமிழ் அறிஞர்களைக் கொண்டு பேருரையாற்றச் செய்தல்
8. தமிழில் திறமிக்க பெருமக்களை ஒன்று கூட்டி தமிழாராய்தல்
9. வேண்டத்தக்க புது நூல்களும் புத்துரைகளும் படைத்து அவற்றை அரங்கேற்றுதல்.

இந்த ஒன்பது நோக்கங்களை நிறைவேற்றத்தக்க ஏழு அமைப்புக்கள் வெற்றிகரமாக இயங்கின.

1. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை.
2. பாண்டியன் புத்தசாலை.
3. நூலாராய்ச்சி சாலை.
4. கல்விக் கழகம்.
5. தமிழ்ச் சங்க முத்திராசாலை (அச்சகம்)

6. செந்தமிழ் என்னும் திங்களிதழ்.

7. தமிழ்த் தேர்வு என்பவைகளாம்.

சேதுசகோதரர்களின் கொடைகள்:-

ஒன்றுவிட்ட உடன்பிறப்புக்கள் மன்னர் பாண்டித்துரையாரும் மன்னர் பாற்கர சேதுபதியவர்களும் இளம்வயதிலேயே தந்தையர்களை இழந்தபோதிலும் மனம் தளராமல் தமிழ்த் தொண்டாற்றத் துணிந்தனர். இன்று நாம் காணும் சேதுபதி மேல்நிலைப் பள்ளி, செந்தமிழ்க் கல்லூரி, நான்காம் தமிழ்ச் சங்கம் போன்ற அனைத்துமே அவர்கள் தந்தருளிய கொடைகளே. வேந்தர் பாற்கர சேதுபதி சங்கத் தொடக்க நாளிலே 10000 வெண்பொன் வழங்கி வாழ்த்தினார். பாண்டித்துரைத் தேவர் தாம் குடியிருந்த வீட்டையே சங்கத்திற்குத் தியாகம் செய்ததோடு மட்டுமல்லாமல் சங்கம் என்ற குழந்தை எந்தவிதக் குறையின்றி வளரத் தேவைப்படும் அனைத்து வசதிகளையும் தம் சொந்த செலவிலேயே பராமரித்தார். சங்கம் என்றுமே சுயமாக தங்குதடையின்றி நடைபெறுவதற்கு தக்க வகையில் சில நிலையான அறக்கட்டளைகளை அமைத்துக் கொடுத்தார் மன்னர் பாற்கர சேதுபதியவர்கள். கடைச் சங்கப் பாண்டிய மன்னன் உக்கிரமப்பெருவழுதி காலத்தில் கி.பி.250ல் மறைந்த தமிழ்ச் சங்கம், 1901–இல் பொன்பாண்டித்துரைத்தேவரால் மீண்டும் நான்காம் தமிழ்ச் சங்கம் என்ற பெயரில் உயிர்பெற்று எழுந்தது. நான்காம் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கி, உயிர்கொடுத்து, உடல் வளர்த்து, கல்லூரி கண்டு, செந்தமிழ் என்னும் திங்களிதழ் பெற்று, தமிழ் மணம் வீச வீரநடை போடுகிறதென்றால் அது சேது சகோதரர்கள் வழங்கிய கொடைகளே.

இன்றும் நான்காம் தமிழ்ச் சங்கம்:-

அன்று, அதாவது 1901–இல், எவ்வளவு சிறப்பாக இந்த நான்காம் தமிழ்ச் சங்கம் தொடங்கப்பட்டதோ; அதே சிறப்புடன்

அதே நோக்கங்களை நிறைவேற்றி, வளர்ச்சிப் பாதை நோக்கி முன்னேறிச் செல்கிறது இன்று. சங்கம் தொடங்கப்பட்ட அன்றேபோடப்பட்ட முதல் மற்றும் ஐய்ந்தாம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, செந்தமிழ்க் கல்லூரியாகவும், செந்தமிழ் திங்களிதழாகவும் மலர்ந்து தமிழ்த் தொண்டாற்றி வருகின்றன. பல தமிழ் அறிஞர்களையும், தமிழ் முனைவர்களையும், தமிழ் இலக்கிய மேதைகளையும் உருவாக்கி மகிழ்கிறது நான்காம் தமிழ்ச் சங்கம்.

தமிழ்ச்சங்க நிர்வாகங்களை, தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு கண்காணித்து வருகிறது. ஆட்சிக் குழுவின் தலைவராக முகவை மன்னர் திரு.நா.குமரன் சேதுபதியவர்களும், துணைத் தலைவராக திருமதி இராணி இலட்சுமி நாச்சியார் அவர்களும், மாண்புமிகு அய்யா திரு.இரா.அழகுமலை அவர்கள் செயலாளராகவும் மற்றும் ஒன்பது ஆட்சிக்குழு உறுப்பினர்களும் ஆட்சிக் குழுவில் பங்கேற்று சிறப்புடன் செயல்பட்டு வருகின்றனர்.

செந்தமிழ்க் கல்லூரியின் நிர்வாகங்களை கல்லூரிக் குழு கண்காணிக்கிறது. கல்லூரிக் குழுவின் தலைவராக டாக்டர் ந.சேதுராமன் அவர்களும், செயலாளராக மாண்புமிகு அய்யா திரு. இரா. குருசாமி அவர்களும் மற்றும் 13 உறுப்பினர்களைக் கொண்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. செந்தமிழ் திங்கள் இதழ் சிறப்பாகத் தமிழ்த் தொண்டாற்றி வருகிறது.

பாண்டித்துரைத் தேவரின் உருவச்சிலை:-

கொடை வள்ளல், சங்கம் கண்ட தமிழ்ச் செம்மல், மாண்புமிகு மன்னர் பாண்டித்துரைத் தேவரின் உருவச் சிலை மீண்டும் 2007-இல் சங்கம் நிறுவியது. சங்கத்தலைவர், துணைத்தலைவர், சங்கச்செயலர், கல்லூரிச் செயலர், சங்க ஆட்சிக்குழு, பொதுக்குழு, கல்லூரிக் குழு, கல்லூரிப்பேராசிரியர் பெருமக்கள் மற்றும் கல்லூரி மாணவ

மாணவியர்களின் ஆர்வத்தாலும் அயராத உழைப்பாலும் சிலை நிறுவப்பட்டதோடு மட்டுமல்லாமல், மாணவ மாணவியர்களின் அணிவகுப்பு மரியாதைகளோடு பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஆசிரியர் குழு:-

நான்காம் தமிழ்ச் சங்கவெளியீடாகிய செந்தமிழ் என்னும் திங்கள் இதழ், 1902 முதல் இன்று வரைமிகச் சிறப்பாக தமிழ்த் தொண்டாற்றி வருகிறது. இவ்விதழை சிறப்புடன் வெளியிட ஆசிரியர் குழு ஒன்று சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது. இக்குழுவில் தமிழறிஞர்களும், பெரும்புலவர்களும், பேராசிரியப் பெருமக்களும், முனைவர் பெருமக்களும், மொழி ஆய்வாளர்களும், தமிழார்வாளர்களும் பங்கேற்று தொண்டாற்றுகிறார்கள். பேராசிரியர் திரு. இரா. சதாசிவம் அவர்கள் பதிப்பாசிரியராகவும், தமிழறிஞர் முனைவர் திரு. தமிழண்ணல், பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன், நா. பாலுசாமி, ம.ரா.போ.குருசாமி, அ.அ.மணவாளன், கதிர் மகாதேவன் மற்றும் தமிழார்வாளர்கள் ஆலோசகர்களாகவும் அவைப் புலவர்களாகவும் வீற்றிருக்கின்றனர்.

சங்க நூற்றாண்டுவிழா:-

நான்காம் தமிழ்ச்சங்கம், வள்ளல் பாண்டித்துரைத்தேவர் அவர்களால் 1901ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் நூறு ஆண்டைக் கடந்து ஏழாம் ஆண்டில் நடைபயின்று கொண்டுள்ளது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பே நடைபெறவேண்டிய நூற்றாண்டு விழா இவ்வாண்டு 2007ல் நடைபெறத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் சங்க ஆட்சிக் குழுதீவிரமாகத் திட்டமிட்டு வருகிறது. நூற்றாண்டு விழா வெற்றிவாகை சூடட்டும். கொடைவள்ளல் பாண்டித்துரைத் தேவரின் புகழ் ஓங்கட்டும். நான்காம் தமிழ்ச்சங்கம் செழித்தோங்கி வளரட்டும். நாற்சங்கம் கண்ட செம்மொழி தமிழே நீ வாழ்க!

தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்,
இரா. சதாசிவம்
செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-2532879

இல்ல முகவரி

இரா. சதாசிவம்
2/404, மருதுபாண்டியர் தெரு,
வட்டாட்சியர் நகர்,
மதுரை–20.

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம்,
2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை–20. ✆ 2532879.

ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 – 32484

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

முனைவர் திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

டாக்டர் திரு. ந. சேதுராமன்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. ம.ரா.போ. குருசாமி

முனைவர் திரு. அ.அ.மணவாளன்

முனைவர் கதிர் மகாதேவன்

முனைவர் நா. பாலுசாமி

முனைவர் பெ. சுயம்பு

முனைவர் திரு. அ. தட்சிணாமூர்த்தி

இராசா திரு. முருகதாஸ் தீர்த்தபதி

முனைவர் திரு. செ. கந்தசாமி

முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,